[illegible]

VI' No. 27 5 [illegible] 1928

JL
[illegible] 2, N128 KN
N 28.1.27
189010

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ளு ஜுலைமீ 5வ [No. 27.

20 NOV 1928

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	521
2.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	523
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	525
4.	தமிழ்ப் பாடம்	528
5.	அரவிந்த கோஷ். கவி இரவீந்திரநாத தாகோர்	530
6.	வானசாஸ்திரம்	531
7.	அகத்திய முனிவர் R. முத்தையர்	533
8.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A., B. L.	535
9.	வர்த்தமானம்	539

க லா நி ல ய ம்.

சொல்வோரிற் கேட்பவ ரருமை.]

மகாகவி இரவீந்திரநாதர் மகரிஷி அரவிந்தரைச் சென்றதிங்கள் புதுவையிற் சந்தித்தார். இது நிமித்தமாக அக்கவிவரர் தம் மனதுள் திரண்ட சில கருத்துக்களை வரைந் தெமக்கனுப்ப நாம் பெரிதும் மகிழ்ந்து இப்பத்திரிகையில் மொழிபெயர்த்துத் தந்துளோம். அதனில் ஒரு பகுதி முன் வாரத்திலும் மறுபகுதி இந்த வாரத்திலும் வந்துள. எமது நண்பர், இரவீந்திர நாதரின் உரையை ஆர அமர்ந்து ஓதி ஓதி ஆய்ந்தும் ஆய்ந்து ஆய்ந்து ஓதியும், ஆழமும் வீரமும் வாய்ந்த அம்மொழிகளின் கருத்தைப் பயனோடு தமதாக்கிக் கொள்ளுமாறு விழைகின்றோம்.

இனி, இரவீந்திரநாதரின் உட் கருத்தைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்வோர்க்கு உதவியாய் நிற்கும் பொருட்டு அரவிந்தகோஷ் என்னும் அவரது இக்கட்டுரையின் மெய்ப்பொருளை யாம் கண்டவாறு இங்கு விளக்கித் தருவோம் :—

ஐந்தாறு வாரங்களுக்குமுன் கவி இரவீந்திரநாதர் சென்னையிற் சிலநாள் இருந்து இலங்கைக்குக் கடல் வழிக் கொண்டபோது இடையில் புதுவையில் இறங்கி அரவிந்த கோஷைத் தரிசிக்க நினைத்தார். அந்நினைவோடு கப்பலிற் போகுங்காலை நம் கவிக்கு உலகத்தின் தற்கால நிலையைப்பற்றிய எண்ணங்கள் பல அவர் மனதின்கண் எழுந்தன. இக்கட்டுரையின் பெரும் பகுதி, அரவிந்தரைப் பார்க்குமுன், 'பார்க்கப் போகின்றோம்' என்ற நினைவால் அவர் மனதில் உதித்த அவ்வெண்ணங்களே அடங்கப் பெற்றிருக்கின்றது.

மாநுட கோடிகள் உய்யும் வகை யாதெனச் சிந்திக்கின்றார். அச்சிந்தனையி னிடையே இக்காலம் யாவர்தம் நோக்கமும் நினைவும் நிறைந்திருக்கின்ற இராஜ்ய தந்திரவாதமும் தனதாய முறைகளும் தொழிற்சாதன வளர்ச்சியும் அவருக்குத் தென்படுவது இயற்கையே. தோன்ற,இவைகள் யாவும் வெளி வாழ்க்கைச் சீரத்திற்கு ஏற்றனவேயன்றி உள் நிலையாய ஆன்ம வாழ்க்கைக்குத் தனித்தனி இவைகளால் பயனில்லை யென்று விலக்குகின்றார். எனின், இவை ஆன்மவாழ்க்கைக்குப் பயன்படா என்பதை உணர்வதன்முன் அவ்வான்ம வாழ்க்கை என்னவென்பதைத் தேர்ந்துணர்தல் வேண்டும். ஆன்ம வாழ்க்கை என்பது தன்னைப் பிரபஞ்சத்திலிருந்தேனும், அப்பிரபஞ்சத்தின் எப்பாகத்திலிருந்தேனும், எவ்வகைத் தோற்றத்திலிருந்தேனும், பிரித்துக்கொள்ளாமல் அகிலத்தைத் தன்னுள்கொண்டும் தன்னை அகிலத்துள் செலுத்தியும் எல்லாம் சமமெனுஞ் சாந்தி பெற்று அமர்வதாம்.

இந்த ஏக ஐக்கிய பாவனையைத் தன்னுள் அடக்கியது ஓம் என்னுஞ் சொல். கிறிஸ்தவவேதம் "உலகத்தின் உற்பத்திக்கு முன்னால் ஒருசொல் இருந்தது" என்று கூறியிருப்பதைக் கவி இங்கு எடுத்துக் காட்டுகின்றார். அந்த வாக்கியம், "அச்சொல் கடவுளின் சொல்......அச்சொல்லே கடவுள்" என்று பைபிலில் தொடர்ந்து முடிவதைக் கவிகூறாவிடினும் நாம் கருத்துட் கொள்வது நலமாம். இந்து வேதங்கள் ஓம்என்னும் பிரணவமந்திரத்தை முன்னும்பின்னுங்கொண்டு வருவதைக் கவி எடுத்துக் காட்டி இருபெரும் மதங்களுக்கும் உள்ள தத்துவ ஒற்றுமையை விளக்குகின்றார். பிரபஞ்சமே பிரணவத்தினுற்பத்தியாகி மீண்டுமப் பிரணவத்தில் ஒடுங்குவதும், அப்பரம் பொருள்தானும் பிரணவ ச்வரூபமா

யிருப்பதுவும் இந்து மதத்திற் சிறிதே பயிற்சி இருப்போர்க்கும் தெரிந்த விஷயம். இந்தப் பிரணவ மந்திரத்தின் நினைவு ஒருவருள்ளத்தில் நொடிப்பொழுதுமகலாது குடிகொண்டிருக்குமாயின் பிரமரகிரீட நியாயத்தால் இச் சொல் குறிக்கும் தத்துவம் தாமே ஆய்விடுவர். எல்லாம் ஒன்றென்னும் அத்தனி நிலையே மெய், மற்ற வெளித்தோற்ற மாறுபாடத்தனையும் பொய், என்னு மவ்வரிய தத்துவத்திற்கு இச் சொல் கரியாய் நிற்பதால் இரவீந்திரநாதர், "வாய்மையின் சுய சம்மதத்தைக் குறிக்கின்ற கருத்துடையது அது. என்றுமுள சாச்வதத்தின் பிராணன் அதுவே யாகும்." என்று அதன் மேன்மையைப் பாராட்டுகின்றார். பிரணவத்தின் பொருளிற்கு இணங்கிப் பிரபஞ்சத்தை ஒன்றாக மதிக்கின்றதொன்றே நிசமானமதிப்பாதலாலும், இவ்வாறு மதிப்பதற்குத் தன்னைப் பிரபஞ்சத்தினின்று பிரித்து நிறுத்தி நோக்குவதால் இயலாததாலும், மற்று முன் சொன்னவாறு பிரமரகிரீட நியாயப்படி அவ்வொரு சொல்லின் ஆன்மாநுபவமே அவ்வைக்கிய நிலைக்கு ஏதுவாகு மாதலாலும், அவ்வகையில் தன்னைப் பிரபஞ்சமாகவும் பிரபஞ்சத்தைத் தானாகவும் காண்கின்ற காட்சியினும் உயரிய காட்சி வேறு இல்லையாதலாலும், அதுவே நிரந்தர சத்தியமாதலாலும், "உயரிய காட்சி எய்திச் சத்தியச் செல்வத்தில் விளங்கும் நெறியூடு மனிதரை நடத்திச் செல்வது அவ்வொரு சொல்லேயாகும்" என்றனர் இரவீந்திரநாதர். தாயுமானவர் 'சொல்லரிய நெறியையொரு சொல்லாலுணர்த்தியே, சுவரூபானுபூதி" காட்டுவதாகப் பாடுகின்ற சொல்லும் கருத்தும் இதுவே. நம் வங்காளக் கவிஞர் தாயுமானவர் பாடலைப் படித்து இருக்கவும் கேட்டிருக்கவும்நேர்ந்திருக்காது. எனினும் இவ்விரு மேன்மக்களும் தத்தம்தூய மனமாழ்ந்த உணர்வினால் எய்திய முடிவைச் சிறிது ஏறக்குறைய ஓரேவிதமான மொழிகளால் விளம்புகின்ற விந்தை பாராட்டத் தக்கது. ஆய்ந்து நோக்கின் இது விந்தையுமன்று. பாஷையும் காலமும் வேறாயினும் உள்ளம் ஒன்றாயிருப்பவர்தம் உரை ஒரு படித்தாகும்.

ஆதலால், எவ்வெக்காலத்தில் மாந்தர் மனதில் இவ்வத்வைத உணர்ச்சி பிறக்கின்றதோ அப்பொழுதே அவர் வேற்றுமை எனும் அறியாமை அகன்று மறுபிறப்பு எடுக்கின்றவராவர். எனவே, அரசியல் முறைகளிலும் அது போன்று ஜனங்களின் புறவாழ்க்கைக் கியன்ற பிற முறைகளிலும் மாறுபாடு நிகழ்கின்றபோதெல்லாம் "நாம் புதியதோர் ஆண்டு புகுந்துவிட்டோம்" என்று புகல்வது ஏற்புடைத்தன்று. உள்ளத்தின் நிலை மாறாது முன்படியே மயக்கத்துள் அது ஆழ்ந்து கிடக்குமாயின் முறைகள் வேறு வேறு பேரோடு வருவதால் ஏது பயன்? புத்துயிர் பெற்றோம் என்று இவைகளைக் கொண்டு கணிக்க வேண்டா. பஞ்சாங்கத்தின்படி வருடங்கள் ஒன்றுபோய் ஒன்று வேறு பேரோடு வரினும் முன்னாண்டு வாழ்விற்கும் பின்னாண்டு வாழ்விற்கும் வித்தியாசம் காண்பதற்கில்லையே. இக்கருத்துக்களைத் தழுவிய நம் கவி, "புதிய ஆண்டினைப் பிறப்பிப்பது பஞ்சாங்கமன்று" என்று ஓதுவாராயினர்.

இதன்பின் இரவீந்திரநாதர் பிரான்சிலும் இதாலியா தேசத்திலும் ஜன வாழ்க்கைச் சரித்திரம் புதியதாயது அரசியல் முறைகளின் மாறுபாட்டாலன்றென்றும் இந்தச் சொல் குறிக்கும் ஒற்றுமை உணர்ச்சியால் விடுதலை பெறுதற்கு நாடிய பொது ஜன மனதின் ஊக்கப் பெருக்கத்தினாலேயே என்பதையும் எடுத்துக் காட்டுகின்றார்.

ஒருநாள் உடலெடுத்து மறுநாள் மரிக்கின்ற காலத்தின் சிற்றெல்லைச் சுற்றளவும், அவ்வுடல் இருக்குமச் சிறுநாளில் பயில்கின்ற இடம் பொருள் ஏவலென்ற சிற்றறைச் சிறுசுவரும் அல்லாது நமக்கு உரியதொன்று பிறிதில்லை என்னும் நினைவாற் பிணிப்புண்டு அதற்கேற்ப வாழ்க்கையை மூடவனென நடத்திவைத்தலே அடிமை வாழ்க்கையாம். இவ்வெல்லைகளைச் சிறிது பெரிது ஆக்குவதால் அவ்வடிமையின் உரிமை மிகுவதும் குறைவதும் நேரலாமேயன்றி அடிமைத்தன்மை அற்ற விடுதலை அடைந்ததாகாது. வீடென்பது ஆதியும் அந்தமும் இல்லாது சாச்வதமாய காலத்தின் சிந்தனையிலும், அங்கு இங்கு எனாது எங்கும் நிறைகின்ற இடத்தின் சிந்தனையிலும் ஒருவன் வாழ்க்கை கலந்து நிகழ்கின்றவோர் அரியநிலை. "இன்று இன்று என்பதை நாயும் குரங்குமே கொள்க. மனிதனுக் கென்றென்று முளது" (Leave now for dogs and apes, Man has For ever) என ராபர்ட் பிரௌனிங் விளம்பிய வாசகமும் இன்ன பொருளதே. அதனை நம் கவி, "என்றுமுள சாச்வதத்தின் பிராணன் அச்சொல்லேயாகும்," என்றும் "நித்தியத்துவத்தின் ஹிருதயத்தில் வாழ்கின்றவர்களே வாய்மையாக வாழ்கின்றவர்களாவர்" என்றும், "ஒரு தனி மெய்ப்பொருளை அநுபவ சாத்திய மாக்கிக் கொண்டவர்களே நிரந்தர நிலையினை எய்தியவராகின்றனர்" என்றும் பலவகைகளில் காட்டுகின்றார்.

இனிப் பூத சாஸ்திரங்கள்(material sciences), ஓம் என்னும் அம்மூலச் சொல் குறிக்கின்ற ஒற்றுமையை விளக்கித் தருவதால் இச்சாஸ்திர ஆராய்ச்சியில் ஆர்வம் ஏற்பட்ட காலத்தில் இவ்வுலகிற்கு ஓர் புத்துயிர் பிறந்த தென்னலாம் என்பர் நம் கவி. எல்லாப் பொருள்களும் எல்லாச்சக்திகளும் ஒன்றே என்னும் மெய்ம்மை இச் சாஸ்திர ஆராய்ச்சியின் முடிவாயிருக்க, அது நம்மை வேற்றுமை நினைவினின்று விடுவித்து 'அம்மூலச் சொல் முழங்குகின்ற கருப்பக் கிரகத்துள் அழைத்துப் போகின்றது" என்று நம் கவி கூறுவது எளிதில் விளங்கும். பிரபஞ்சமே ஒரு 'சலனத்தின் (vibration) தோற்றம்' என்று இக்காலம் சாஸ்திரங்கள் வகுக்கும் கொள்கை 'ஓம்' என்னும் நாதமே உலகம், என்ற பண்டை நாள மந்திரத்தை மீண்டு முச்சரிப்பதாகும். சட சாஸ்திரங்களால் விளையும் இவ்வொற்றுமைநலத்தை நாம் முன் 1928, ஜனவரி 19உ தலையங்கத்தில் (41-வது பக்கம்) ஒரு சிறிது வேறு சந்தர்ப்பத்தில் சொல்லி யிருக்கின்றோம். அதினை ஈண்டெடுத்துக் கூறுதல் மிகை. அதன்படி இரவீந்திர நாதரின் உரையை ஆராய்வோமாயின், "எல்லா விஷயங்களையும் தன்னுளமைய முன்னெடுத்துக் காட்டித் தானே அநாதியாய்ப் பின்நிற்கும் மெய்ம்மையின் பிரபஞ்சமயமான தோற்றத்தை மனிதருக்குச் சாஸ்திரம் தோற்றித்தந்தது" என்ற கருத்துப் புலப்படுதல் அருமையாகாது. பின்னிற்கும் மெய்ம்மை எல்லாம் ஒன்றென்னும் தத்துவம், வெளியிலே வேற்றுமை தோன்றினும் அவ்வொன்றின் வேறு வேறு தோற்றங்கள் இவை ஆவது சாஸ்திரங்களின் உண்ணின்ற இரகசியமாதலால் அது, பின்நிற்கின்றதென்றார். இனி வஸ்துக்களும் சக்திகளும் தோன்றுவதும் அழிவதும், புதியதாய் உண்டாகி இல்லாமற் போவதென்றெண்ணுவதும் சாஸ்திர விரோதமானவை. அந்த ஒன்றே மாறிமாறி வேறு வேறு தோற்றங்கள் எடுப்பதால் ஆவதுமில்லை அழிவதுமில்லை. ஆதலால் அதனை அநாதி என்றழைத்தார். இந்த மெய்ம்மையை, இதனிற் காணலாம் இதனிற் காண இயலாது என்று, பிரிப்பதற் கியலாதது பற்றி அதன் தோற்றம் 'பிரபஞ்சமயமான தோற்றம்' ஆயது.

காந்திமதி என்னும்
காந்தாரநாட்டுக் கட்டழகி.

(505-வது பக்கத் தொடர்ச்சி)

24 இரண்டாம் சுயம்வரம்.

திருமணம் நிகழ்ந்தநாள் நாணத்தோடு கடைக்கண்ணால் கண்டதல்லாது தன் நாயகனைப் பிறகு பார்க்கின்ற பாக்கியமும் பெறுதலின்றியே, மகேந்திரவிம்மனின் அருமைப்புதல்வி மந்தாகினி சித்ரமோகன மாளிகையில் பாங்கிமாருடன் புலம்பலுற்று வைகும்நாள் ஒருநாள் மாலைப்பொழுதில், மாளிகைக்கயலே சிறிது உலவுவாளாய்க் குண்டலினி நதியின் கரையைத் தொடர்ந்து தன்னுடன் ஏகும் தோழியொடு வார்த்தையாடிக் கொண்டே நதியும் கடலும் புணருமிடத்தை யணுக அங்குப் போஷகற்குப் பாஷாணம் வைக்கும் நரபாலனும் தாமோதரனும் அரசிளங்குமரனை வஞ்சனையால் தம் வலைப்படுத்த முயன்றதினம் அத்தினம் ஆகையால், அப்பாதகர்களைத் தீண்டுதற்குக் கூசித் தன் கிரணங்களை ஒடுக்கிச் சினத்தால் சிவந்து, தீயோர் முக நோக்கிய பாவம் தீரக் குடகடல் குளிப்பான்போல் பரிதியும் பூமியின் கோடியின் றகன்றுகொண்டிருந்தான். மந்தாகினியும் அவள் தோழியும் கடற்கரை மணலில் அமர்ந்தனராய்ச் சிற்றில் கோலிக்கோலிச் சிதறிக்கொண்டே தம்முள் உரையாடி இருந்தபோது, ஏவலாளனொருவன் கதிரவன் சாயுமுன் அவளைக்காண வந்தானென விரைந்தெதிர் வரக்கண்டனர். தன் தந்தைதாம் அனுப்பிய செய்தியைத் தாங்கி வரும் ஆளாக அவன் இருத்தல் வேண்டுமென மந்தாகினி முதலில் எண்ணினாள். ஆயினும், வருமவன் சிறிதருகு எய்திடச் சித்ராங்கனின் சின்னங்களை அவனணிந்திருந்தது தெரிந்ததால் இவளுக்குத் திகைப்பு உண்டாயிற்று. மனதிற்றன் குலதெய்வத்தை உன்னி மணலிலவள் மணிவிரலால் கூடலெழுதிக் குறிநோக்கினாள். கோடும் கூடியது கண்டவுடன் அவள் முகத்திலுற்ற பொலிவு ஆயிரம் சந்திரனை அன்றே வென்றது. உலகத்தை எல்லையோடு தம்முளே அடக்க முயன்றவோவென அவள் கண்கள் மலர்ந்தன. இதற்கிடையில் வந்த அவ்வேவலாளனும் மெல்லமெல்ல அண்மி இறைஞ்சினனாய்த் திருமுகமொன்றை அவள்கரங்களில் தர, அரசியும் "கோமகர்க்குத் தீதிலவே" என வினவியவாங்கே அதனை ஏற்றலும், அவன் "வாழி வேந்தன் வாழி மைந்தன், விண்ணவர் அருளால் இருவரும் சுகமே" என்றோதி அயற்கண் அகன்று நின்றனன்.

முடங்கலில் வரைந்த உரையை முற்றும் வாசியாமுன் கண்ணீரரும்பி அவள் பார்வையை மறைத்தது. மெய்யெலாம் புளகம் பூப்ப விதிர்த்தனள். நெற்றியிற் குழைந்துலவும் கூந்தலை நீக்குவான்போல் கண்ணின்று சொரியும் நீரைத் துடைத்துக்கொண்டு நிருபத்தை ஒதிமுடித்தாள். தலைவியின் முகக்குறியை ஊகித்தறிந்த பாங்கி அவள் கைநின்று கடிதத்தைத் தான் வாங்க எத்தனிக்கையில், அவள் முதலிற் சிறிது மறுத்தாளேனும் பின் புன்னகையுடன் அதனைக் கொடுத்து விட்டாள். தோழியும் அதனை இனிதின் ஓதி, உரைசெய்ய அரியதொரு உவகை எய்தினளாய், "அன்னாய், காண், யான் இயம்பி வந்தமொழி பொய்த்ததில்லை. இளவரசர் ஒருநாள் வாராதிருக்கமாட்டாரென்று கூறியுளேனன்றோ. பெற்றாய் நீயப் பெருமக னன்பினை......ஆயமும் மறப்பாய் இனி, ...எனினும், மணமொடு சேர்ந்த மலர் வண்டிற்குஞ் சிறிது தேன் உதவு மென்பதை மறவாது......" என்று சொல்லிவருகையில் மந்தாகினி அவள் வாயைத் தன் கையால் புதைத்துக் "கயற்கண்ணி, கருத்திலாச் சில சொற்கள் கழறவேண்டா. இத்திருமுகம் தெரிக்கும் செய்தி யாதடீ, பாவாய். சகுந்தலைக்குந் தமயந்திக்குஞ் சமமாக எளியளைக் குறிப்பித்த தேனடீ, என்னடீ பொருத்தம் !" என்று வினவினாள்.

கயற்கண்ணி நிருபத்தை நெடிது நோக்கி, "ஒன்றிற் குணர்கின்றேன், அம்ம, மற்றொன்று தெரியவில்லை," என்றனள்.

"எதற்குத் தெரிகின்றது ?"

"சகுந்தலைக்கு."

"அவள் செய்தபாக்கியம் நான் செய்திருக்கவில்லையே. சகுந்தலையோ கூடிப் பிரிந்தாள்."

"அவ்வகைத் தன்று என்நினைவு—தந்தைப் பொருத்தம்—கோசிகனும் கஜேந்திரவிம்மனும் கோபத்திலே ஒருவர்க் கொருவர் ஏற்றந்தாழ் வற்றவர்கள்"—என்று கூறிய கயற்கண்ணி, இவ்வடாத வார்த்தைக்குத் தன்னைத் தன் தலைவி யாதுசெய்வளோ எனுமச்சம் சிறிது கொண்டனளாகி அதனை மறைப்பதற்கு மீண்டுமோர் முறை கையிருந்த கடிதத்தைப் படிப்பாள்போல் பாவனை புரிந்தாள். மந்தாகினியும் முகமறைத்து நின்ற தன் தோழியின் கைகளைக் கடிதத்தோடு தாழ்த்தி, "நன்று நன்று, இவ்வேளை யானுன்னை வைதிடேன் என்னும் நினைவாலோ வாய்வந்தன வழங்கி விடுகின்றாய் ......மற்று, தமயந்தி?"

"தமயந்திக்குத் தா னம்மா, பொருத்தந் தெரியவில்லை. இருப்பினும், நம்மிருவர் சரிதத்தைச் சற்று ஆராய்வோம். அன்னத்தை அடிதொழுது தூதுபோக்கினீரோ ? இல்லை—சூதாட்டம் ? அதுவும் இல்லை. காடு புகுந்ததுண்டோ? இல்லை.......நீயும் குருவி பிடித்துக் கொடுக்கச் சொன்னதில்லை......அவரும் துணியைக் கிழித்துக்கொண்டு ஓடவில்லை......நண்டு பிடிக்கவில்லை ...அடிசில் உண்ணவன்றி ஆக்கக் கற்றிலரவர்........ ....இருதுபர்ணன் யாவனேனும் நம்மிடையே இருக்கின்றானோ?...... ஓகோகொ! அப்படிச் சொல், இப்பொழுது தெரிந்தது. எங்கோன் மகளிற்கு இரண்டாம் சுயவரம் நடக்கின்றது. கண்டேன் !" என்று ஆரவாரஞ் செய்தனள் கயற்கண்ணியே.

இவ்வுரை விளைத்த நகை சிறிதாடு முதடோடு மந்தாகினி சிந்தனையு ளாழ்ந்தனளாய்த் தன்தோழியின் கையிலிருந்தகடிதத்தைத்தான் வாங்கி மறித்தொருகால் வாசித்துக், "கயற்கண்ணீ, கண்டிலைகொல் இதன் கருத்தை? துஷ்யந்தனும் நளனும் தத்தம் தேவியரைவிட்டுப் பிரிந்தனரென்றால் அக்குற்றம் அவரவரதே. பேதை அம்மாதர் யாதும் பிழை இழைத்திலர். அன்னபடி தன்பாலே தவறுன்னதென்று ஏற்றுக்கொள்கின்றாரடீ என்னரும் பெருந்தகை. தோழி, உரைநுட்பம் எனதேயாயினும் இதற்குப் பரிசிலை நீ பெற்றுக்கொள்," என இயம்பித் தாள நன் மாலையை அவளுக்கு அணியச்சென்றாள்.

கயற்கண்ணியோ கள்ளம் தெளியும் வாயினளாய் மந்தாகினியின் கைகளைத் தடுத்து, "அம்ம, யான் காணாத உரைக்குப் பரிசில் வேண்டா.—பெண்ணென்ற பெற்றியால், இழைத்தபிழை யாவும் தன் கணவன்பால் உளதென்று உன்னுதல் பேதை மாதரார்க்கு இனிமைதரும்.

ஆதலாலன்றோ உனக்கு இவ்வரும்பொருள் புலப்பட்டது......நன்றுநன்று.........இனியுனக்கு மனமிருக்குமாயின் பரிசிலைத்தா'' என்றனள்.

"நீ முன்னுரைத்த பொருளுக்கு அன்றேனும், பின்னிகழ்ந்த அருளுக்கே இப்பரிசில் பெறுவாய்,'' என்று முத்தின் வடத்தைத் தோழியது கழுத்தில் அணிந்து தழுவினள் மந்தாகினி. தோழியோ, "தாயே, நீ எனக்கு மாலை புனைகின்ற அன்பையும் ஆர்வத்தையும் மதிக்குங்கால், என்னையானென்று எண்ணி நீசெய்கின்றாய் எனல் இயலாது. சிறிது சென்றால் என் முகத்திலே மீசை சில இல்லையே என மயங்குவாய், என்று மதிக்கின்றேன்,'' என அவள் கைகழன் றோடி விட்டனள்.

கதிரவனும் கடலினுள் கரந்தனன். தலைவியின் அருந்துயர் தீர்ந்ததென்ற பேருவகையாலும், அவளன்போடளித்த நித்திலத் தாமத்தின் நினைவினாலும், புத்தி தடுமாறிய கயற்கண்ணி பேசும்வகை ஓராது வாய்வந்தன கழறுகின்றன ளென்பது உணராமல், நாணமிகு மடவார்க்கு ஒவ்வா அம்மொழிகளைக் கேட்கவெள்கி விண்ணும் முகஞ் சிவந்ததெனச் செவ்வானம் படர்ந்தது. தலைவியுந் தோழியும் களிதவழும் உள்ளத்தினராய் மாளிகைக்கண் ஏகினர்.

நாளை இளவரசன் வருவனெனத் தெரிந்தும் மந்தாகினி முற்றிலும் மனக்கவலை தீர்தலுற்றா ளல்லள். அருந்தவம் புரிந்தொன்றை அடைதற் கியன்றசெவ்வியில் கைக்கெட்டியது வாய்க்கெட்டாவகை எவ்விடையூறு நேருமோ எனும் கவலை அவளுள்ளத்திற் புகுவது இயற்கையே. மாலைமறைந்த பரிதி காலையில் ஒல்லை வருவான்கொல் என்று ஐயுற்றனளென்ன அவள்முகம் வாட்டமெய்தியது. பாங்கிமார் சூழ்ந்த பரிகசத்திற்கெல்லாம் அவளுரைத்த எதிர் மாற்றத்தில் ஓரளவு துன்பமும் ஊடுருவக் காணலாம். மந்தாகினி தெய்வத்தினிடத்தில் நந்தாத பக்தி வாய்ந்தவள். இரவு உண்டி கொண்டிலள். மேன்மாடி சென்று சந்திரனும் தென்றலும் அன்றிலுந் தேடித் தேடிப் பழிக்கப் புகுந்திலள். நேராகத் தன் பூசைசெய் அறையுட் புக்காள். அங்குத் தன் இஷ்டதேவி விக்ரகத்திற்குக் கோலஞ்செய்து, அக்காட்சியைத் தன்னிரு கண் மலர்களாலும் அருச்சித்து, அன்பினால் உருகிவிழும் தனது விழிநீர் வார்த்துத் தாள் துளக்கிப் பொருந்திய தன் பக்தியையே நைவேத்தியஞ் சமர்ப்பித்துச் சொன்மாலை புனைவாளாகி, இரு கை குவித்து "அம்பா, சாம்பவி, பரதேவதை, அன்றமரர் உய்யுமாறு அறுமுகத்தொரு குமரனைப் பயந்தீன்ற அன்னையே, இடர்தீர் கரிமுகற்கு வாய்த்த நற்றாயே, கங்கையணிந்த சொக்க லிங்கன் பங்கினில் வாழ் உமையே, மலையரையன் பெருமகளே, என் கலிதீர்ந்ததோ? நீ தந்த நாயகன் நாளை வருமோ, வாராமற்றான் தாழ்க்குமோ? நினதுள்ளந் தெரியாது நெகிழ்கின்றேனே'' என்ன இன்ன பல பாராட்டிப் பரவலோடும் தன்னின் மெல்லணைப் பள்ளியெய்திப் படுத்தனள்.

விண்மீன்வலைஞனென ஞாயிறு கீழ்த்திசை வந்து தோன்றினன். அவன் வீசிய கிரணமெனும் கண்ணியும் ஒன்றிரண்டு மந்தாகினியின் மாளிகைக் கோபுர கும்பத்தைப் பற்றியது. உலகெலாம் ஒளி சூழ்ந்தலவினுமென்! காவுடைய செய்கையார் நெஞ்சத் திருள்நீக்க ஆயிரம் திவாகரர் ஒருங்கு வரினும் பற்றார்.

இங்குச் சித்திரமோகன மாளிகை சூரியனின் ஒளியை வரவேற்றுத் திகழ்கின்ற சமயத்தில், அங்கு இரத்தின புரியில், இருள்பிரியா உள்ளத்தராய நரபாலனும் தாமோதரனும் எழுந்து சென்று பிரதாபதீரர் வனமனையை அடைந்தனர். அவ்விடத்தில், பூசாரியின் கையைநக்கும் பலியாடுபோன்ற நம் சித்ராங்கன் மண்ணாசைப் பொன்னாசைப் பேய்களுக்கு எளிதில் இரையாகப் பெண்ணாசை மேற்கொண்டு அவ்வஞ்சகர் வரவினிற்கு அவாவி நின்றான் மூவரும் படகுபுக்குக் குண்டிவினி வழி தவழ்ந்து சித்ரமோகன மாளிகைக்குப் புறப்பட்டனர். புறப்பட்டிவர் சிறிது தூரஞ் செல்லுங்கால் சந்திரசேகரரது மாளிகை தென்படச் சித்ராங்கன் அதைக் காட்டி, "நரபாலா, காந்தாரநாட்டுக் கட்டழகி இப்பொழுது இதற்குள் வசிக்கின்றாளல்லளோ? எப்பொழுது அங்கு அவள் வந்து சேருவாள்?'' என்று வினவினன்.

"நாம் சென்றடைந்த நாழிகை இரண்டினிற்குள் காந்திமதி வந்து சேரும்படி செய்திருக்கின்றேன்,'' என்றான் நரபாலன்.

"சந்திரசேகரர்வயம் அவளை அவள்தந்தை ஒப்புவித்திருப்பதாகப் பிரதாபதீரர் சொல்லியுளார். ஆயின் அவ்விடம்விட்டு அவளை எம்மாளிகைக் கிழுக்க எவ்விதத்தில் நினைத்துளாய்?''

"கஜேந்திரவிம்மரின் புதல்விபால்சென்று காந்திமதி வைகுவதென்பதே அவரெண்ணம். அதுவரையில் சந்திரசேகரருடன் தங்கியிருக்கச் செய்தனர். நம் நகரத் தலைவர்க்கோ செருக்கிற்கேற்ற செய்திறம் இல்லை. அவருக்கு ஒரு படகுக்காரன் உண்டு. அவனை என்வசமாக்கிக் கொண்டு, ஆறுபோவதற்கு அரியதாயிருக்கின்றதென்று பொய் சில சொல்லிவைத்துக் காந்திமதியின் செலவைத் தடுத்து வந்துளேன்.''

"நினக்கதனால் என்ன இலாபம், நரபாலா?''

"நின்பா லதனைச் சொல்வது நலமன்று.''

"சொன்னபின் நலம் உளது அன்று என்பதை நானே தேர்கின்றேன். நீ சொல்,'' என்று சித்ராங்கன் சினத்தோடேவினன்.

"அவ்வியமோ, அரசே, அழல்கின்றாய்! வாணனுக்காற்றாத் தலைமகனை இன்றே கண்டேன். அற்றன்று. மடத்தின் அதிகாரத்திற்கும் மதவிதிகளுக்கும் விரோதமாகி, அக்குற்றத்திற்குள தண்டனைநின்று தப்பவே அப்பெண் சந்திரசேகரரது மனையில் ஒளிந்துளாள். அவளிருக்கு மிடத்தைச் சேவகர் கண்டுபிடிக்கும் வரையில் அவளை நிறுத்திவைக்க நினைத்தேன்.''

"நினக்கதனால் என்ன இலாபம் என்பது நரபாலா, இன்னும் விளங்கவில்லை.''

"குற்றவாளிக்கு அடைக்கலம் தந்த குற்றத்திற்காகச் சந்திரசேகரருக்கும் தண்டனை கிடைக்காதோ?''

"ஆயின், நரபாலா, அவ்வழகியைத் தீயிலிட்டு, இப்பிரபுவையும் தண்டிக்க வேண்டுமென்னும் முயற்சி நீ யேற்றதேன்.''

"சே, சே, சித்ராங்கா, நம் காமவெறிகொண்ட மடாதிபதிகள் அழகிகளை ஒருபோதும் அதிகம் தண்டிக்கமாட்டார். சட்டம் ஒன்றேயாயினும் அது செல்லுந்திறம் ஆளுக்காள் வெவ்வேறு வகைத்து. எழிலுடை நங்கையெனின் சட்டமும் சாயும். மற்று, இச் சந்திரசேகரனெனும் நம் நகரநாயிற்கே தக்க தண்டனை கிடைக்க வேண்டுமென்பது என் விருப்பம். சிகரவிலாஸமெலாம் மடத்திற்குப் பறிமுதலாம். அதுகண்டு மகிழவே நானிது சூழ்ந்தேன். மன்னன் முன்னிலையி லென்னை வாட்போர்க்கழைத்து நிந்தித்தா னல்லவா, அக்கயவன்!''

"நரபாலா, இவ்வகைப் பழிசூழ்வது மிக இழியதென்றெண்ணுகின்றேன்.''

"இழியதாயின் ஆக. என்செய்வேன். இளவரசே, ஸ்கைகொண்டு பழிதீர்க்க இயலாதவன் யுக்தியைச்

செலுத்தித்தான் முடித்துக்கொள்ள வேண்டுமன்றோ? ஆயினும் என். அந்த யுக்தியும் பயன்படாமற்போயிற்று. தயையே உருவாய உன் சிறியதந்தை விராடபத்ரர் கதுமெனக் குடிகள்பால் கருணைகொண்டு, அவர்களுக்கு மதசுதந்திரம் அளிக்கவெண்ணி முன்விதித்த சட்டத்தை நீக்கிவிட்டார். ஆகையால், இனிக் காந்திமதி சிகரவிலாஸத்தில் இருப்பதால் எனக்கொன்றும் பயனில்லை. இன்று பத்துநாழிகைக்குமேல் ஓடம்நடத்த இவ்வாறு ஏற்றதா யிருக்குமென்று அப்படகோட்டியைக் கொண்டு சந்திரசேகரருக்குச் சொல்லச்சொல்லி யிருக்கின்றேன். உனது மாளிகையை நாம் போய்ச்சேர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவளும் அங்குவந்து சேருவாள். மாந்தாகினியம்மையுடன் இன்புற்றுத் தன் காலம் கழிப்பதற்கன்று, இப்பயணத்தால் நீயெய்து மிளைப்பை ஆற்றுதற்கே.''

"சட்டம் நீங்கியதெனின் இன்னும் அவள் ஒளிந்திருக்க நிமித்தமில்லையே. தன் தந்தைபால் மீண்டு சேராது அவள் நம் மாளிகைக்குப் போவதேன்.''

"தந்தை அவண் இங்கில்லை. பெருங்குன்றம் புகலாக அவனும் போயுளான். சட்டம் மாறியதென்பது அவனறிந்திலன். அவள் நகரிற்கு வருமளவும் மகளிற்கு ஓர் இடம் வேண்டுமே. ஆதலால் அங்குப் போகின்றாள்,'' என்று நரபாலன் இயம்பினன்.

"வலையோ நெடிது நெய்கின்றாய், நரபாலா வாய்க்கும் இரையோ யாதென ஐயுறவு எய்துகின்றேன்......'' என்று இளவரசன் சொல்லுமளவில் ஆற்றின் கரையோரம் அரவமொன்றுண்டாகக் கேட்டனர். அரவம் வந்தவழி விரைந்தவர் தம் படகைச்செலுத்தி நோக்கத் திண்ணியவோர் சுணங்கன் சேவகனொருவனின் காலைக் கவ்வியிழுக்கவும் பெண்ணொருத்தி கலக்கமுற்றோடவும் கண்டனர். கண்டனரேனும் இது நிகழுமாறு நேர்ந்தவிதம் அப்படகிலிருந்தவர் அறியார்.

முன்னாள் மாலையில் சிதராங்கன் அனுப்பிய காதற்செய்தியைத் தாங்கிப்போய் மந்தாகினியிடம் கொடுத்தவன் இவ்வாள். இரவு அவண் அவ்விடமே கழித்துக் காலையில் அரசியை விடைவினவ அவளும், பொன்னுபாணம் ஒன்று அவனுக்குப் பரிசிலளித்து, "வருவதானால் வரச்சொல்'' என்று மறுமாற்றம் கூறி விடுத்தனள். நதியின் கரையோரமே பற்றி அவன் நடந்துவந்தான். வரும் வழியில் நமது பாண்மகள், யாழ் குழல் நாய் அனைய சின்னங்களோடு அவனுக்கு எதிர்முகமாய் வர நேர்ந்தனள். இளவரசனுக்குத் தொழும்பனாயினோன் இவன், சின்னஞ்சிறுமியொருத்தியைத் தன்னந் தனியிடத்தே சந்திக்க அங்குக் காட்சிமுதல் அகப்பொருள் இலக்கணம் பயில ஒருதலைப்பட்டான். வண்டோச்சி மெய்பயிற வியலும். மற்றிப் பெருநாயோச்சி மெய் பயில்தல் அவனுக் கரியதாயிற்று. தீயனிவன் தீண்டுமுன் பாண்மகள் மருண்டு ஓடினள். ஓடுபவளைப் பின் பற்ற அவ்வாள் முயல்கையில் குக்கலோ வந்தவன் காலைக் கதுவிக்கொண்டது.

படகினின்று பார்த்த சித்ராங்கனுக்குத் தன்னாள் அவன் என்பது தெரியவில்லை. அவ்வாளோ, வருவது தன் தலைவன் என்பதும் படகு கரை சேருமிடம் பாண்மகளும் எய்துகின்றாள் என்பதுவும் தெரியவே, தன் தசையில் ஓர் கவளம் அந்நாயின் வாயில்விட்டு எஞ்சிய காலினோடு ஓடோடிப் போயினன். 'மேலவர் செய்வதைத்தானே நானுஞ் செய்தேன்' என்று வேலையாள் துணிந்துபேச என்றும் இயலாதன்றோ!

இச்சிறு சம்பவமே நம் கதையின் பின் பாகத்திற்கு அச்சாணி ஆகின்றது. கரையற்ற வெறுப்பிற்குப் பாத்திரமாயிருக்கும் தன் மனைவி, 'வரச்சொல்' என விடுத்த மொழியை அவ்வேவலாள், படகைக் சந்தித்ததும் ஓடுதற்கொத்த அவசியத்துட்பட் டிலனாயின், இளவரசற்குத் தெரிவித்திருத்தல் வேண்டும். ஆயின், அவன் படகைத் தான் வந்தவழியே கடிதின் உந்தித்திரும்பியிருப்பான் என்பதற்கு ஐயமில்லை. அது வொன்று மாத்திரமே யன்று.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாருந் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

அரிமா நோக்கு.

சேக்கிழார் பாடியருளிய திருக்கதையின்சிறப்பியல்பை அறிவதென்றால், மற்றைய கதைகளோடு இக் கதையை ஒப்புநோக்கி உயர்வுகண் டறிவதாகும். மற்று, இனிக்கதைக்குங் கதைக்கும் உள்ள வேறுபாடு சுவை வேறுபாடேயாதலினால், சுவையினை முதலில் ஆராயத்தொடங்கினோம். சுவைப் பொருளும், பொறி யுணர்வும், உள்ளக் குறிப்பும், விறலும், கூற்றும், நிலையும், முதற் பொருளும், கருப்பொருளும், உரிப் பொருளும், என்ற இவை எல்லாம் சுவையினைத் தோற்றுவிக்கின்றனவாதலின் இவற்றைப் பற்றியும் சிறிதெடுத்து விளக்கினோம். மேலே சுவைகளின் இயல்பினையும் உருவினையும் அறியவேண்டிப் பரதர் கூறிய பாகுபாட்டின்படி, உவகை, வெகுளி, பெருமிதம், இளிவரல் என்ற முதற் சுவையினையும், அவற்றினின்று முறையே பிறந்த நகை, அழுகை, மருட்கை, அச்சம், என்ற வழிச்சுவையினையும், தொல்காப்பியர் காட்டிய பிறப்பிடங்களிற்சென்று, கண்டு, அச்சுவைகள் ததும்பப் பாடிய பெரும் புலவர்களின் பேருதவியால் ஒரு சிறிது அறிந்து அச்சுவைகளை ஆராய்ந்துய்த்தோம். சுவையை எண்ணித் தொகுத்த தொன்றாலேயே சுவையை உணர்ந்தவராகோம் என்பது கண்டு, Benedetto Croce என்பார்எடுத்துக்காட்டிய சுவையின் உருவை விரித்துரைத்தோம். சுவைகளை எண்ணுவதே சாலும் என்போர் வாழும் எண் உலகமும், அறம் புகட்டியோ இன்பமூட்டியோ பயன்படுவதே பாட்டின் தொழில் என்போர் வாழும் பயன் உலகமும், அறிவை எளிதில் வளர்ப்பதே அரும்பாட் டென்பார் வாழும் அறிவு உலகமும், மேற்கூறிய தொன்றுமல்ல என்பார் வாழும் அன்மையுலகமும், அறிவிற்கு மப்பாலுக் கப்பாலாய் அமர்ந்ததே அழகிய பாடல் என்பார் வாழும் அறிதுயில் உலகமும் கடந்து சென்று, உண்மை உலகடைந்து உலகப் பொருளைக் கனவிலோ நனவிலோ கண்டது கண்டபடி கண்டுணர்ந்து துய்ப்பதே அணி யென்றும், அதன் வடிவே சுவை என்றும் கண்டோம். சுவையும் உள்ளுணர்வும் ஒன்றென முடிவுகட்டி அப்பெரியார் முடித்ததை மற்றொரு முறையும் நினைப்பூட்டிக் கொள்வோமாக.

"உள்ளுணர்வாவது வெளிப்பட்டுத் தோன்றும் உணர்வு; தர்க்கஞானத்தினும் வேறாகித் தனி நிற்பது; உள்ளது இல்லது என்ற வேற்றுமையும், இடம் பொழுது என்ற எண்ணங்களும் எழுவதற்கு முன்னரே முளைத்து, அவை எழுந்தபின்னும் அவற்றிற்கு வேறாகி விளங்குவது. உருப்பட்டு வெளித்தோன்றும் வகையில் உள்ளே கலங்கிக் குழம்பிக் கிடக்கும் புலனுணர்வுக்கு வேறாகி விளைவது. உள்ளுணர்வு உண்டென்றால் அதனை வெளியிடல் வேண்டும். உள்ளுணர்வுதான் உரை. அவ்வுரை சொல்லேனுமாக, இசையேனும் ஆகுக, ஓவியமேனும் ஆகுக, உரையைத்தவிர உள்ளுணர்வு வேறல்ல. அதனினும் மிக்கதும் அல்ல, அதனிற் குறைந்ததும் அல்ல".

மனக்கண்ணால் கண்டதைப் பாவலன் மகிழ்ச்சி மிகுதியால் கண்டது கண்டபடி கழறிவிடுகின்றான். அவன் பாடியது கேட்டு நம்மனம் மாறுவதேனோ வெனச் சுவையறி புலவரின் சொக்குமாந் தடியைக் கண்டறியத் தொடங்கி, உண்மைத் தலைவனின் உவமையே கூத்தில் வருந் தலைவனாதலின் உள்ளம்மாறி உண்மைச் சுவையை உணர்ந்து துய்க்கின்றோமெனும் பட்டலொல்லடர்கொள்கையையும், ஓவியத்தில் வரைந்துள்ள கோடுகளைக் கண்டு குதிரை என உய்த்துணர்தல்போலப் பாவலனின் புனைந்துரை கேட்டுச் சுவையினை உய்த்துணர்ந்து மகிழ்கின்றோம் எனும் சாங்குகர் கொள்கையினையும், நாம் முன் கண்டறிந்தவை நமது உள்ளத்தில் சுவையோடு அமிழ்ந்துகிடக்கப் பாவலனது சொற்கள் தமது பொருள் ஆற்றலால் அவற்றை எழுப்பிவிடவே நாமவற்றைத் துய்த்துக் களிக்கின்றோம் எனும் பட்டநாயகரது கொள்கையினையும், நாம் முன் புலனுணர்வாக உணர்ந்தவற்றைப் புலவன் தனது உள்ளுணர்வால் உணர்ந்து புனைந்துரைக்கையில் உரையையும் கடந்த உள்ள நிலையைத் தனது சொக்குமாந்தடி எனும் உள்ளுறையால் மாற்றிப் பிறக்கச்செய்து, சுவையைத் துய்ப்பித்து மகிழச்செய்கின்றபொழுது அங்கெழுந்த சுவையுணர்வு மெய்யுணர்வுபோல உள்நின்ற உணர்வேயாகிப், புலனுணர்வென்னும் மயக்கவுணர்வு நீங்கத் தான் தானேயாகித் தனி நின்று வேறொன்றையும் உணராது இன்பமாகின்றது எனும் த்வனிகாரர் கொள்கையினையும் கண்டு அவற்றில் பின்னையதே பெரிதும் பொருத்தமுடையதெனப் புகழ்ந்தோம்.

சுவையின் வடிவும் வகையும் ஒரு சிறிது அறிந்த பின்னர்ச் சேக்கிழாரது கதைக்கும் மற்றையோர் கதைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறியத் தொடங்கிக் கண்ணப்பர் கதையைப் புலவர்கள் தனிப்பாடல்களாகப்பாடிச் சென்றதை ஆராய்ந்தோம். கண்ணப்பர் கதையை உள்ளுறைப் பொருளாக வைத்துப் பாடுகையில், கண்ணுக்கு ஓர் வீடு என்று பண்டமாற்றாக ஆளுடைய பிள்ளை பாடிப்போவதும்; ஆளுடைய அரசு, கண்ணப்பரது பெருந்தகைமையையும் பேரன்பினையும் கண்டு கடவுள் பெரும்பேறுதவினதைப் பாடிப்போவதும்; ஆளுடைய நம்பி, அவனுக்கருள் செய்ததுபோல தனக்குமருள் செய்தல்வேண்டுமென இரந்து நிற்பதும்; ஆளுடை அடிகள், கண்ணப்பரது ஒப்பிலா அன்பினைப் பாராட்டுவதும்; நம்பியாண்டார் நம்பி, ஆண்டவனருளைப் புகழ்வதும்; பட்டினத்துப்பிள்ளையார் கண்ணப்பர் செய்த தொண்டின் அருமைபாராட்டி உள்ளம் நடுங்குவதும் கண்டு, ஒருபொருளையே பலர் பலவாறாகப் பாடியமை அறிந்து மகிழ்ந்தோம். உள்ளுறையணியாகப் பாடிய செய்யுட்களை ஆராயப்புகுந்து கந்தபுராணக்காரர் கண்ணப்பர் திருமஞ்சன மாட்டுவது போல மழையானது மலைமீது பொழிந்தது என்றுவமை கொண்டதையும், மருதவனப் புராணக்காரர் அவ்வுவமையையே கூறவந்தும் முன்னவர்போலச் சுவை பயக்கக் கூறாது போனமையையும், கண்ணப்பர் எச்சிலிறைச்சி யுதவி இணையிலா வீடுபெற்றது போல உவர்நீர் உதவி ஒப்பிலா நன்னீர் அருந்தியது ஆழி என்று தியாகராஜலீலை பாடிப் போவதையும், பெருந்துறைப் புராணம் "கண்ணப்பர்க்குப் பிறகு வேடர்களை இகழ்தலும் ஆமோ" என்று கூறிப் போவதனையும், குற்றாலப் புராணம் "இறைச்சியும் இறைவனுக்கு ஏற்றமானது போல என் குறைமொழியும் நிறை மொழியாம்" என்று அவையடக்கம் சொல்வதனையும், திருவாரூர்ப் புராணம் அன்பிற்குத் தனிப்பேர் உவமையாகக் கண்ணப்பரை எடுத்துக் காட்டியதையும் கண்டு களித்தோம். மேலே உள்ளுறை சுவைதோன்றப் பாடிய சிவப்பிரகாசர், காளமேகம், சொக்கநாதப்புலவர், நமச்சிவாயப்புலவர் முதலியோர் இறைவன் செருப்பாலடிபட்டதற்கு இரங்கியும், இறைச்சி தின்றதனை இகழ்ந்தும், இன்னும் பலவாறு ஏசியும் புகழ்ந்தும் சொல்கின்ற போக்கிலேயே சுவை பெருகப் பாடியதையும் படித்து மகிழ்ந்தோம்.

மேலே சென்று கண்ணப்பர் கதையை முழுதும் பாடிப்போகும் நூல்களை ஆராயத் தொடங்கிச் சேக்கிழாருக்கு முன்னூல்களாக விளங்கிய நக்கீரர் பாடிய திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தினையும், கல்லாடனார் பாடிய திருக்கண்ணப்ப தேவர் திருமறத்தினையும் ஊன்றிப் படித்தோம். கண்டோர் மனம் நடுங்க நின்ற கண்ணப்பர் வடிவினையும் உருவினையும் நிறத்தினையும் கண்டு அஞ்சி, அவர் புனிற்றிளங் கன்று என இறைவனெதிரே கரைந்துருகுவதனையும் கண்டோம். அதுகண்டு மனம் நொந்த அந்தணர் கனவில் ஆண்டவனெழுந்தருளிக் கண்ணப்பரைப் புகழ்ந்து கூறுவதனையும் அதற்கேற்ப அப்பெரியார் தம் கண்ணிடந் தப்பியதையும் வானவரோடும் முனிவரோடும் கண்டு களித்தோம். இக்கதையில் உவகை, அச்சம், வெகுளி இளிவரல், அவலம், பெருமிதம், நகை, மருட்கை என்ற பல சுவைக்குறிப்புகள் தோன்றினும் முற்றமுடிய உயிர் நிலையாக இருப்பது மருட்கையே என்றும் கன்மனம் படைத்தவன் கடவுளெதிரே நீராய் உருகுகின்றானென்றே நக்கீரர் தம் கதையில் விளக்கி வியந்து பாராட்டுகிறார் என்றும் முடிவு கட்டினோம்.

பிறகு கல்லாடர், தமது கல்லாடத்தில் "மிச்சிலுக்கின்னும் இச்சைசெய் பெருமான்" என்று கூறிய இறைவர் இழிநிலை யடைந்ததன் உண்மையைத் தமது திருமறத்தில் கூறவந்தமையைப் பின்பற்றி ஓதினோம். வேடர்போலப் பலகறையும் மயிற் பீலியும், தோலும் சுரிகையும் பூண்டிருந்த கண்ணப்பரை அடி முதல் தலையீறாகப் புனைந்துரைத்து, இவ்விழிதகையான் இறைவன் கண்ணில் புண்ணீர் ஒழுகக்கண்டு கண்ணிடந்தப்பிய வள்ளன்மையைப் புகழ்ந்து கடவுளொருவர் வேண்டாம் கண்ணப்பனே பிறவிக்கு மருந்தா யமைந்தான் என்று போற்றிமுடித்த கல்லாடரதுகதையிலும் நகை, இளிவரல் அவலம், பெருமிதம்முதலிய சுவைக்குறிப்புக்கள் தோன்றினும் இழிதகையோனாகிய கண்ணப்பன் பெருந்தகை யாரும் செயற்கரிய செய்துயர்ந்தமை கண்டு மருட்கை கொண்டே கல்லாடனார் பாடுகின்றார் என்று வியந்து பாராட்டினோம். நக்கீரரும் கல்லாடனாரும் மருட்கைச் சுவை ஒன்றே ததும்பப் பாடினாலும், முன்னையோர் கன்மனக் காட்டாள் நன்மன வீட்டாளானமை கண்டு வியந்து பாடப் பின்னையோர் இழிதகையான் பெருந்தகையாரானமை கண்டு வியந்து பாடுகின்றார் என்ற வேற்றுமையையும் விளக்கினோம்.

இனி, ஆளுடைய நம்பிகளது திருத் தொண்டத் தொகையே முதனூலாகவும், நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியே வழி நூலாகவும் கொண்டு சார்பு நூலாகத் தமது பெரிய புராணத்தைப் பாடவந்த சேக்கிழார் கதையை மேனோக்காக நோக்கி அங்கு உவகைச் சுவை பெருக்கெடுத் தோடுவது கண்டோம். அகழ்வதும் இன்பமாயது என்று அப்பெரியார் எடுத்துக் காட்டியதையும் குறித்து வைத்தோம். இவ்வாறு சேக்கிழார்க்குமுன் கண்ணப்பர் கதை எவ்வாறிருந்ததென ஒருவாறு அறிந்து, அப்பழங்கதைகளோடும் மற்றைய தனிப் பாடல்களோடும் இவர் கதைக்கு உள்ள ஒற்றுமை வேற்றுமையைச் சிறிது சுட்டிக் காட்டினோம்.

பின்னோர் நூல்களோடு இப்பெரியாரது கதையை ஒப்பு நோக்குவதற்குமுன், இக்கதையை மேனோக்காகப் பார்த்ததோடமையாது சிறிது உள்ளீடாகவும் உணர்ந்தோதல் வேண்டுமாதலின் இக்கண்ணப்பர் கதையின் உயிர்நிலையாகிய அன்பு என்பதனை ஆராயத் தொடங்கினோம். அன்பென்பது தமிழரது இன்ப வடிவினதாகிய அக ஒழுக்கத்தியல்பு என்று கண்டோம். தமிழர் கூறிய இன்பவழியானது அன்புவழியே என்பது திருக்குறளை ஒருமுறை விரைந்தோதினாலும் விளங்கும் என்றறிந்தோம். அன்பென்பது சிவமே என்றும், ஆனால் நாமறிந்த அன்பெல்லாம் அன்பின் போலியாகிய சிற்றன்பே என்றும், இச்சிற்றன்பைச் சிறுகச்சிறுக நம்மைச் சுற்றிலும் பெருக்கிக்கொண்டு போனால் அஃது உலக முழுதினையும் வளைத்துக்கொண்டு பேரன்பாய்ப்பழுத்து மெய்யுணர்வாகிய தேன் சொட்டும் என்றும் உணர்ந்தோம். ஆகவே அன்பினை உயிராகக் கொண்டொளிரும் அக ஒழுக்கமும் சிவ ஒழுக்கமாதல் வேண்டியிருக்க, அகப்பாட்டெல்லாம் காதற்பாட்டாய்க் காணப்படுதலின் நுட்பத்தை யறியவேண்டி அப்பாடல்களைப் பாடியவர்கள் அருந்தமிழ்ப் பெரியோர்களும் ஆண்டவனும் அடியாருமாய் இருத்தலைத் தெளிந்து, சொல்லையும் மனத்தையும் கடந்த துரிநிலையாகிய பேரின்பத்தைச் சொல்லால் உலகினர்க்கு விளக்குதற்கு உவமையாகச் சிற்றின்பத்தினைக் கொண்டு, அச்சிற்றின்பத்திலும் சிற்றன்பிலும் கிடக்கும் களிம்பினைப்போக்கி, அச்செம்மைப் பேரின்பமாகிய செம்பொன்னாக்கிக் காட்ட முயன்றனர் மூதறிஞர் எனத் தெரிந்துகொண்டோம். உலகில் காணப்படும் அன்பானது திருவின்மேலும், உணர்வின்மேலும் ஒழுக்கத்தின்மேலும், அழகின்மேலும் ஓடிப்படர்ந்த அவாவோடு சிக்கிக் கொண்டிருத்தலின், அவற்றினின்றும் அன்பினை விடுவிக்க எண்ணிய பெரியோர் இவை எல்லாம் இரண்டிடத்தும் ஒத்துள்ள நிலையில் ஒன்றும் வேண்டாது எழுந்த உள்ளக்கிளர்ச்சியே உண்மை யன்பென்றதையும் அறியலாயினோம். ஒருவர் கொடுக்க மணந்து வாழு முறையின் மனமொத்து வாழ்வது கொடுத்ததற்கு முன்னரேயன்றிப் பின்னரன்றாதலின் இருவரும் இயற்கையில் மனமியைந்து கூடும் களவு ஒழுக்கமே அன்பொழுக்கத்திற்குச் சிறந்ததாகும் என அறிந்தோம். திருவே முதலானவை ஒத்திருக்கும் யாழோர் கூட்டத்திலும் அவற்றைப்பற்றிய எண்ணம் வருவதற்கு இடமுண்மையால் அவரையும் அறியாமல் அவாத் தளிர்த்தலும் கூடும் ஆதலால் அந்தக் களிம்பைநீக்க, அவ்வெண்ணமே எழாத தன்னுணர்வற்ற நிலையே அன்புநிலை என்று அன்பு ஆராய்ந்தார் காட்டிய முடிவினையும், அந்தத் தன்னுணர்வற்றநிலை இறைவனோடு ஒன்றுபட்டுத் தான் என்பதற்ற தனிப்பெருநிலை என்ற பெருமையினையும் கனாக் கண்டாற்போலக் கண்டறிந்து களித்துலகை மறந்தோம். ஈருயிரும் ஓருயிராதலோடு ஈருடலும் ஓருடலாய் அந்நிலையில் ஒன்றி நிற்கின்றன என்பதனை "அவளுக்குத் தலைநோய்வர இவனுக்குந் தலைநோய் வந்து விடுகிறது" என்று தமிழ்ப்பாட்டிகள் பேசிக்கொள்வதனின்றுமே அறிய முடிந்தது. இவ்வன்பு என்பது மொழிபெயர்க்கலாகாததோர் தமிழ்மொழி யென்றும், காதல், கண்ணோட்டம், அளி, ஆர்வம், இரக்கம், இனிவு, அழுகை, அருள், நட்பு, நகை ஒற்றுமைக்காட்சி, நடுநிலை, மகிழ்ச்சி, என்று சிறப்பித்துப் பேசப்படும் உள்ள நிலைகளுக்கு எல்லாம் அப்பாலுக் கப்பாலாய் நின்று அவற்றின் உயிராய் ஒளிர்வதென்றும், அன்புநிலையில் எல்லாம் தலையன்பும் தீவிரதரமு மாதலின் அதனைத் தலை இடை கடை என்று பிரித்தலும், தீவிரம் தீவிரதரம், மந்தம், மந்ததரம் என்று வேறுபடுத்துவதும் சிற்றன்பிற்கு ஒக்குமேனும் பேரன்பிற்குப் பொருந்தா என்பதும், நன்கு புலனாயின. நாண நாட்டம் நடுங்க நாட்டம் என்ற கோவைத் துறைகள் அகவொழுக்கத்தில் பயின்றுவரின் தலைவி உயிர்துறப்பாள் என அன்பாராய்ந்தார் கூறுவதொன்றே நாம் மேற்கூறிவந்தவற்றை எல்லாம் நிலைநிறுத்துமென நேரில் உணர்ந்தோம்.

அன்பொழுக்கமே தமிழ் ஒழுக்கம் என்பதனைப் பிற கதையைக் கூறவந்த கம்பரும் கச்சியப்பரும் கொங்குவேளும், அவற்றைத் தமிழ் ஒழுக்கப்படி கூறிக் களவு பாடுவதனையும், வில்முறிப்பதற்கு முன் இருவரும் உள்ளத் தொருவராய் உவகைபூத்துப் பிறர் உடல்மேல் படினும் பேதுற்று மடியும் பயிர்ப்பின் பெருநிலையைப் பேசுவதனையும் கண்டு தெளிந்தோம். குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் ஐந்திணைக்குத் தக்க நிலமும் பொழுதும் வகுத்த அருமையினையும் பாராட்டினோம். ஆகவே அன்பு வடிவான அகப்பாட்டு, உவமை வாயிலாக உண்மை கூறுதலின், சிவப்பாட்டே யாமெனத் தேறினோம். இன்னும் தமிழர் காதற்பாட் டொன்றினையே அன்பின் பாட்டாகப் பாடினார் அல்லர் என்றும், தாயானவள் தன் பிள்ளைபால் வைத்த அன்பால் இறந்த தலைப்பெயல் நிலையையும், தயரதன் மாய்ந்த தனி நிலையையும், கோப்பெருஞ்சோழன் இறந்ததும் உடன் வந்தமர்ந்த பிசிராந்தையார் பெருமையையும், முருகன்மேல் அன்பு பாராட்டி ஆடிய வள்ளிக்கூத்தினையும், கடவுள்மேல் பாடிய கோவையினையும் கண்டறிந்து அத்தமிழப் பெரியோர்கள் பலவகையாலும் அன்பினை ஆராய்ந்த அருமையைக் கண்டோம். அன்பு தமிழ் நாட்டிலிருந்து பரந்து பெருகியது என்று வடநூல் கூறுவதனையும் கேட்டோம். இவ்வளவும் அறிந்தாலன்றி அன்பின் வடிவினையும் அரும்பெரும் தன்மையினையும் அறிதலாகாமையின் இத்துணையும் விரித்துரைக்க வேண்டியதாயிற்று. இத்தகைய ஆராய்ச்சிக்கு இன்றியமையாத கருவிநூல்கள் இக்காலத்தோர்க்கு ஏற்றவாறு இல்லாமைபற்றியும் தந்துரையாகப் பலவும் புகுத்திக் கூறிவந்தோமாகையால், முதலில் மற்றொன்று விரித்தல்போலத் தோன்றினும் பின்வருவனவற்றைநோக்க அவைஇன்றியமையாதனவாய்முடியும் என மனப்பால் குடித்த பிழை யுளதேல் பெரியோர் பொறுத்தருளவேண்டுமென அவர் பொன்னடி வணங்கிப் பெரியபுராணத்தே இனிப் புகுவோம்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 27.

நள வெண்பா

கலிதொடர் காண்டம்.

நெடுங்காலம் நளன் விதர்ப்பன் நகரிலே தமயந்தியுடன் தங்கியிருந்து, பிறகு அவ்விருவரும் நிடதநாடு நோக்கிப் புறப்படுவதோடு கலிதொடர் காண்டம் ஆரம்பமாகின்றது. அவ்வாறு புறப்பட்டவராய்த் தேரில் ஏறியதைச் செப்புகின்றது முதற்செய்யுள்.

தவளத் தனிக்குடையின் வெண்ணிழலுந் தையல்
குவளைக் கருநிழலுங் கொள்ளப்—பவளக்
கொழுந்தேறிச் செந்நெற் குலைசாய்க்கு நாடன்
செழுந்தேரி லேறினான் சென்று. 1.

காவியங்கள் ஒரு தலைவனின் கதையைத் தொடர்ச்சியாய்க் கூறுவது மாத்திரமல்லாது, சில வர்ணனைகளும் அமையப் பெற்றிருக்கவேண்டுமென்பது மரபு. அவைதாம், கடவுள் வணக்கம், நாடு நகரம் மலை கடல் பருவம், சூரியனும் சந்திரனும் ஆகிய இரு சுடர்களும் தோன்றுவதும் மறைவதும், கலியாணம், சோலையில் விளையாடல், நீர் விளையாட்டு, மதுவருந்தி ஆடுதல், உலாவருதல், மந்திராலோசனை, ஊடல் கூடல் புதல்வர், தூது படை எழுச்சி, போர் வெற்றி பட்டாபிடேகம், முதலியன. பெரும்பான்மை எல்லாக் காவியங்களிலும் இவ்வுறுப்புக்கள் யாவும் வரவேண்டும். எனினும் கதைக்கு ஏற்றதில்லையாயின் சில வருணனைகள் குறைந்தாலும் குறையலாம். ஒன்று விடாமல் எல்லாம் எப்படியாவது வந்தே தீர வேண்டும் என்ற நியதியில்லை. கம்பராமாயணம் கந்தபுராணம் சீவகசிந்தாமணி போன்ற நூல்களில், செய்யுள்கள் ஆயிரக்கணக்காய் அமைந்திருக்கின்றன வாதலால், முன் சொன்ன வருணனைகள் ஒவ்வொன்றும் பலவிடங்களில் இருபது முப்பது நாற்பது செய்யுள்கள் பெற்று விரிவாகக் கூறியிருக்கக் காணலாம். 'நளவெண்பா' நானூறு நானூற்றைம்பதுசெய்யுள்களுக்குள் அவைகளிற் சிலஅடங்கியநூல். ஆதலால் இவ்வருணனைகளுக்கு ஆங்காங்கு ஒன்றிரண்டு செய்யுள்களுக்குமேல் கவி கொடுத்திலர்.

நளன் தன் மனையிலிருந்து முதலில் சோலைக்குச் சென்ற சந்தர்ப்பத்தில் இரண்டு செய்யுள்களால் உலா என்னும் பாகத்தைக் கவிவருணித்தார்என்று முன்னரே (83-வது பக்கம்) கூறி இருக்கின்றோம். நாடு நகர வர்ணனைகளும், அன்னத்தைத் தூதுவிட்ட தூதும், சுயம்வரம் திருமணம் கலவியிற்களித்தல் முதலிய செய்திகளும் சுயம்வரகாண்டத்தில் வந்திருக்கின்றன.

கலிதொடர் காண்டத்தின் முதல் பத்துப் பதினைந்து செய்யுள்களால் புகழேந்தி, பொழில் விளையாட்டும் நீர் விளையாட்டும் கூறுகின்றார். பொழில் விளையாட்டென்பது காதலனும் காதலியும் பூஞ்சோலை புகுந்து அங்குப் பூப்பறித்து விளையாடுவதைப் பலவகை அணி நயங்களோடு எடுத்துக் காட்டுவதாம். நீர் விளையாட்டென்பது அவர் நீராடி இன்புறுகின்ற செய்தியைக் கூறுவது.

நளனும் தமயந்தியும் தேரில் போகும்போது வழியிலே ஆங்காங்குள்ள சோலைகளிலும் குளங்களிலும் காதலர் எய்த அவர்தம்முன் நிகழ்கின்றனவற்றை நளன் தமயந்திக்குக் காட்டுகின்ற முகமாக இக்காண்டத்தில் பொழில் விளையாட்டும் நீர் விளையாட்டும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் தனித்தனி ஒரு சித்திரம். அவை பின் வருவன.

மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்தடையப்
பொங்கி யெழுந்த பொறிவண்டு—கொங்கோ
டெதிர்கொண் டணைவனபோ லேங்குவன முத்தின்
கதிர்கொண்ட பூண்முலையாய் காண். 2.

பதப்பிரிவு:—மங்கையர்கள் வாசம் மலர் கொய்வான் வந்து அடைய பொங்கி எழுந்த பொறி வண்டு கொங்கோடு எதிர்கொண்டு அணைவனபோல் ஏங்குவன முத்தின் கதிர் கொண்ட பூண் முலையாய் காண்.

அன்வயம்:—முத்தின் கதிர்கொண்ட பூண்முலையாய், மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வந்து அடைய பொங்கி யெழுந்த பொறிவண்டு கொங்கோடு எதிர் கொண்டு அணைவனபோல் ஏங்குவன, காண்.

கருத்து:—வழியிலுள்ள சோலையில் மாதர் சிலர் வருவதும், அதனால் பயமுற்ற வண்டுகள், பருகிய தேன் வாயிலேயே இருக்கக் கதுமென எழுந்து ஒலிப்பதும் நிகழ்வதை நளன் தமயந்திக்குக் காட்டினான்.

பதவுரை.

முத்தின் - முத்துமாலையின்
கதிர் - பிரகாசத்தை
கொண்ட - தழுவிக்கொண்ட
பூண் - ஆபரணங்களையணிந்த
முலையாய் - முலைகளையுடைய தமயந்தியே,
மங்கையர்கள் - மாதர்கள்
வாசம் - வாசனையுடைய
மலர் - மலர்களை
கொய்வான் - பறிக்கும்பொருட்டு
வந்து - (இச்சோலைக்கு)வந்து
அடைய - சேர்வதனால்
பொங்கி - உயர்ந்து
எழுந்த - கிளம்பின
பொறி - புள்ளிகளையுடைய
வண்டு - வண்டுகள்
கொங்கோடு - (காணிக்கையாக) தேனை எடுத்துக் கொண்டு
எதிர்கொண்டு - (அம்மாதர்களை) எதிர்கொண்டு (அழைப்பதற்கு)
அணைவனபோல் - நெருங்குவனவற்றைப்போல்
ஏங்குவன - ஒலிக்கின்றவைகளை,
காண் - பார்ப்பாய்.

விரிவுரை:—இந்தச் செய்யுள் என்ன அணியால் அலங்கரிக்கப் பட்டிருக்கின்றது? அணைவான்போல், என்று உவம உருபு வந்திருப்பதால் உவமையணி என்னப் படாது. கருத்தைப் பார்த்தல் வேண்டும். அதற்கு இது உவமையென்று இரண்டு விஷயங்களைச் சம்பந்தப்படுத்திக் காட்டவில்லையாதலால், இது உவமையல்ல. மனிதர் வருவதால் வண்டுகள் பறந்து அகலும் நிகழ்ச்சிக்குக் கவி தன்னுடைய குறிப்பு ஒன்றை ஏற்றிச்சொல்வதால் உத்ப்ரேக்ஷாலங்காரம் என்று சொல்லப்படுகின்ற தற்குறிப்பேற்ற அணியேதான் இது. அந்தத் தற்குறிப் பேற்றவணி பொருளாலும் காரணத்தாலும் பயனாலும் மூன்று விதப்படும் என்று முன்னமே சொல்லி இருக்கின்றேன். (488-வது பக்கம்) இந்த மூன்றில் ஒவ்வொன்றிற்கும் இவ்விரண்டு உள்பிரிவுகள் இருக்கின்றன.

தற்குறிப்பேற்றம் மூன்றனுள் இச்செய்யுள் ஏதுத்தற்குறிப்பு. பயம் காரணமாக வாஸ்தவத்தில் வண்டுகள்

பொங்கி எழுகின்றன. ஆனால் அந்தக் காரணத்தை நீக்கி, மாதர்களை வரவேற்பதற்காக எழுகின்றன வென்று அவைகள் எழுவதற்கு வேறு காரணம் அல்லது ஹேது குறித்தபடியால் இது ஏதுத்தற்குறிப் பேற்றம் ஆகின்றது. இந்த ஏது தற்குறிப்பேற்றமும், உளபுலவேதுத்தற்குறிப்பேற்றம் என்றும் இல்புல வேதுத் தற்குறிப்பேற்றம் என்றும் இரண்டு விதப்படும். இவ்விரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை நாமிங்கு உதாரண வாயிலாகப் பார்ப்போம்:

(1) "எத்தனையோ துன்பத்திற்காளாக இப்பாழும் பிறவி எடுத்தேனென்று ஏங்குவனபோல் பிறந்ததும் குழவிகள் அழுகின்றன." இதனில், அழுகை என்ற செய்தி நிகழ்கின்றது. அவ்வழுகைக்குத்தான் இல்லாத காரணம் குறிப்பாக ஏற்றப்படுகின்றது. நிகழ்ச்சியிருக்கக் காரணம் மாத்திரம் கற்பிக்கின்றபடியால் இது உளபுலவேதுத்தற்குறிப்பு. புலம் என்றால் இடம் அல்லது வயல் என்பது அர்த்தம். காரணம் வேறாயினும் ஒரு குறிப்பை ஏற்றுதற்கு நிகழ்ச்சி யென்னும் இடமாவது இருக்கின்றதெனும் கருத்தில் இதற்கு [உள - (இருக்கின்ற) புல - (இடத்தை உடைய) ஏது - (காரண சம்பந்தமாயுண்டான) தன் - (கவியினுடைய) குறிப்பு - (கருத்தை) ஏற்ற-(மேற்கொண்ட) அணி-அலங்காரம்] = உளபுலஏதுத்தற்குறிப்பேற்றவணி என்று பெயர் இட்டனர்.

(2) "நின் முகத்தழகைத் தானே பெறவேண்டுமென்று சந்திரனும் தாமரையும் தம்முள் போராடுவதாலல்லவோ ஒன்றற்கொன்று பகையாகும்." சந்திரன் உதித்ததும் தாமரை குவிந்துகொள்வதை ஆதாரமாகவைத்து இதனில் ஒரு குறிப்பு ஏறி இருக்கின்றது. ஆகையால் இது தற்குறிப்பேற்றவணி. இவ்விதம் தாமரை குவிவதற்கு ஒரு காரணம் குறித்திருப்பதால் இது ஏதுத்தற்குறிப்பேற்ற வணியாம், அக்காரணம் பகை. ஆனால் வாஸ்தவத்தில் தாமரைக்கும் சந்திரனுக்கும் பகை யொன்றுமில்லை. பகையே இல்லாதிருக்க, முதலில் பகையொன்று இருப்பதுபோல் பாவனை செய்துகொண்டு, அந்தப் பகைக்கு, இம்மாதின் முகத்தழகைப் பெறவேண்டு மென்றதைக் காரணமாயமைத்ததால் இது இல்புலம் ஏதுத்தற்குறிப்பு. அதாவது, இல்லாத இடத்தில் ஹேதுவொன்று ஏற்றிச் சொல்வதாம்.

ஏதுத்தற்குறிப்பேற்ற அணியில் இவ்விரண்டு வகைகள் இருப்பதுபோலவே, விரிபுலப் பொருள்தற்குறிப்பு, தொகைபுலப் பொருள்தற்குறிப்பு என்று பொருள்தற்குறிப்பிற்கும்; உளபுலப்பயன் தற்குறிப்பு, இல்புலப் பயன்தற்குறிப்பு என்று பயன்தற்குறிப்பிற்கும், இவ்விரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அவைகளை வருமிடத்தில் காண்போம். இப்படத்தை நினைவிற் கொள்வது நலம்:

- தற்குறிப் பேற்றவணி
  - பொருள்தற் குறிப் பேற்றவணி (a)
    - விரிபுலப்பொருள் தற்குறிப் பேற்றவணி (1)
    - தொகைபுலப்பொருள் தற்குறிப் பேற்றவணி (2)
  - ஏதுத்தற் குறிப் பேற்றவணி (b)
    - உளபுல வேதுத் தற்குறிப் பேற்றவணி (1)
    - இல்புலவேதுத் தற்குறிப் பேற்றவணி (2)
  - பயன்தற் குறிப் பேற்றவணி (c)
    - உளபுலப்பயன் தற்குறிப் பேற்றவணி (1)
    - இல்புலப்பயன் தற்குறிப் பேற்றவணி (2)

மாதர் வந்து அடைந்ததால் பொங்கி எழுந்த வண்டுகள், அவர்களுக்குத் தேன்கொடுத் தழைப்பனபோல் ஒலித்தன, என்று இச்செய்யுளில் அமைந்த கருத்து ஏதுத்தற்குறிப்பேற்றவணி யென்று கூறினேன். மாதர் வர வண்டுகள் எழுந்ததற்குக் காரணம் பயமா யிருக்கக் கவி தன் கருத்தின்படி 'அம்மாதரை எதிர்கொண் டழைக்க எழுந்தன' வென்று வேறு காரணம் குறிப்பதால் ஏதுத்தற்குறிப்பேற்றம் ஆயிற்று. எனின் இது, உளபுலமோ, இல்புலமோ? உளபுலந்தான். ஏனெனில், மாதர் வர, வண்டுகள் எழுந்தவரையில் வாஸ்தவமே. ஆதலால் கவி குறித்த காரணத்திற்கு வண்டுகள் எழுந்ததாகிய நிகழ்ச்சி யென்னும் இடம் ஒன்று உளது.

குறிப்பு:—(1) கொய்வான், என்பது பார்வைக்கு வினைமுற்றுமாதிரித் தோன்றினும் அது இங்கு வினைமுற்று அல்ல. வினைமுற்றாயின் ஆண்பால் வினைமுற்றாகும். ஆயின் மங்கையர்கள் கொய்வான், என்று சேராதகையால் இது முற்றல்லவென்று தெரிவது சுலபம். கொய்யும்பொருட்டு என்னும் அர்த்தத்தைத் தருகின்ற வினையெச்சம் "உண்பான் வந்தேன்," "கற்பான். வந்தனன்" என்ற இடங்களில் பான் என்பதும், இங்குக் கொய்வான் என்றதில் வந்த வான் என்பதைப்போல ஒரு வினையெச்ச முடிவு. பாக்கு என்றகூட முடிகின்ற வினை யெச்சங்கள் இருக்கின்றன.

கொய்வான், என்ற வினையெச்சம் வந்து என்ற மற்றொரு வினையெச்சத்தைக் கொண்டுமுடிய, அது காரணப் பொருளில் வந்திருக்கும் அடைய என்னும் இன்னொரு எச்சத்தைக் கொண்டு முடிகின்றது. அந்த அடைய என்னும் வினையெச்சம் பொங்கி என்னும் வினையெச்சத்தைக் கொண்டு முடிய, அப்பொங்கி என்பது எழுந்த என்னும் பெயரெச்சத்தைக் கொண்டு முடிகின்றது. எழுந்த என்னும் பெயரெச்சம் வண்டு என்னும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகிறது.

பெயரெச்சம் வினையெச்சம் இரண்டும் வினைச்சொற்களே யென்றும், பெயரெச்சம் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் என்றும், வினையெச்சம் வினைச்சொல்லைக் கொண்டுமுடியும் என்றும், அவ்விதம் வினையெச்சம் கொண்டுமுடிகின்ற வினைச்சொற்கள், வினைமுற்றாகவேனும் வினையெச்சமாக வேனும் பெயரெச்சமாகவேனும் இருக்கலாம் என்றும் முன் பல இடங்களில் சொல்லியிருப்பதை நினைவுபடுத்திக் கொள்க.

(2) வினைச்சொல்லில், வினையால் அணையும்பெயர் என்பது ஒன்று.

ஒரு காரியம் (அல்லது வினை அல்லது தொழில்) சம்பந்தமாக மூன்று விஷயங்கள் குறிக்கலாம்.

(a) அந்தத்தொழிலின் பெயர் இன்னதென்று குறிக்கலாம். உதாரணம்: கொலை, கல்வி, நடத்தல், ஈகை, முதலியன. இவை கொல்வதென்றும் கற்பதென்றும் நடப்பதென்றும் ஈதலென்றும் இருக்கின்ற தொழில்களின் பெயர் இது இது வென்று சொல்கின்றன. இப்படித் தொழில்களின் பெயரைச் சொல்வன பெயர்ச்சொல் ஆகும். வினைச்சொற்களல்ல ஒரு விஷயத்தின் பெயரைக் குறிப்பது பெயர்ச் சொல் என்ற விதிப்படி தொழில் ஆகிய விஷயத்தின் பெயரைக் குறிக்கின்றபடியால், இவைகளைத் தொழிற்பெயர் என்று இலக்கணம் அழைக்கும்.

(2) ஒரு தொழில் செய்வதைப்பற்றிக் குறிக்கின்ற காலத்தில் அச்சொல் வினைச் சொல்லாகும் என்று முன்னரே கற்றிருக்கின்றீர். கொன்றேன், கற்கின்றாய், நடந்தான், ஈவோம், என்ற உதாரணங்களில் அவ்வத் தொழில்களின் பெயர் இன்னவென்று குறிக்கப்படவில்லை. ஆனால் அச்செயல்கள் செய்யப்படுகின்றதை அச்சொற்கள் காட்டுகின்றன. இவை வினைச் சொல்.

(3) இனி, ஒரு விதத்தில் பெயர்ச் சொல் போலவும் மறுவிதத்தில் வினைச் சொல் போலவும் நடக்கின்ற சில சொற்கள் இருக்கின்றன. உதாரணம்: "போர் வென்றவனை வீரன் என்றழைப்பர்." இதில் வென்றவன் என்பது வெல்லுவதாகிய தொழிலின் பேரைக் காட்டவில்லை, ஆதலால் அது தொழிற் பெயரல்ல. வெல்லும் தொழிலின் பெயர் வெற்றி. மற்று இங்கு

வென்றவன் என்பது வெல்லுதலாகிய தொழில் நடைபெறுவதைப் பற்றியுஞ் சொல்லவில்லை போர் வென்றேன் அல்லது வெல்லுவான் என்பனபோல் இருந்தால், வினைமுற்றாம். வென்றவன் என்பது வெல்லும் தொழிலின் பெயருமல்ல, வெல்வதாகிய செய்கையைச் சொல்வது மல்ல. வென்ற ஒருவனைப்பற்றிக் குறிக்கின்றது. ஆதலால் அதற்கு வினையால் அணையும் பெயர், எனப் பெயர் வழங்கினர்.

வென்றவனின் பெயரைச் சொல்கின்றதோ என்றும் எண்ண வேண்டா. அவன் பேர் வீரன். அது தொழிலின் பேரையும் சொல்லவில்லை, செய்தவன் பேரையும் சொல்லவில்லை. செய்வதையும் சொல்லவில்லை. ஒருவன் செய்வதாகச் சொல்கின்றது. அம்மட்டே.

கொன்றவன் நிற்பவன் கற்றவன் பார்ப்பவர், என்பன போன்ற உருவங்களில் வினையாலணையும் பெயர் சாதாரணமாக வரும். ஆனால், "கற்றார் கற்றாரை விரும்புவர்," என்றபடி கற்றார் என்பது வினைமுற்றின் உருவம். இருப்பினும் இங்கு அது வினையாலணையும் பெயர். "இப்பிள்ளைகள் பாடம் கற்றார்," என்ற இடத்தில் கற்றார் வினைமுற்றாயும் முன் உதாரணத்தில் அது வினையாலணையும் பெயராகவும் இருப்பதைக் காண்க.

இந்தச் செய்யுளில் அணைவன, ஏங்குவன என்ற இரண்டு சொற்களும் வினையாலணையும் பெயர்கள். "அணைகின்றவைகளைப் போல் ஒலிக்கின்றவைகளைப் பார்" என்று பொருள்படுத்திக் கொள்ளவேண்டும்.

அரவிந்த கோஷ்

By

கவி இரவீந்திரநாத தாகோர்.

(Special for Kalanilayam)

[516-வது பக்கத் தொடர்ச்சி]

எனது நண்பர் க்ஷேதமோகன ஸேன் என்பவர் சேகரித்துப் போற்றியுள தமது அரிதினும் அரிய வாசகக்களஞ்சியத்திலிருந்து வங்காளப்பாட்டுக்களில் பழைய பாட்டொன்றின் முதலடிகள் எனக்குச் சொல்லியிருப்பது இப்பொழுது என் நினைவிற்கு வருகின்றது. அதனை,

"ஏ, ஏ, அவசிய மவசிய மென்ற அவசர மூர்க்கா
சீ, சீ, மலரா மனதைநின் பரபரப்பினிற்
பொசுக்குவ தேனோ"

என ஒருவாறு மொழிபெயர்க்கலாம்.

பின்னாள் முதிர்ச்சி அடைவதற் கிருக்கின்ற மனதில் பதுங்கிக் கிடப்பதாய்க் குற்றமற நிறைவதற்கியன்ற சக்தியை ரூபிக்கப் போதுமான அவகாசம்வேண்டும். ஆனால் மகா குரூரமான அவசரம் ஒன்று வந்து மனதை வலிந்து பரிக்ஷிப்பதொரு விரைந்த வழியை மேற்கொள்ளவே, அம்மனமோ, பிரயத்தனத்தின் வைபவத்தை மக்களின் கும்பல் வியக்குமாறு விட்டுவிட்டுத் தானே மறைந்து போய்விடுகின்றது. எங்கெங்கும் இந்தப் பேராசை அவசரம், சத்தியத்தைத் தன் தேர்க்காலில் கட்டிக் குறுக்கு வழியாகப் புழுதிப் பிரமையூடு இழுத்துக்கொண்டு போவதை நாம் காணக்காண, அதற்கு எதிராகப் பகுத்தறிவினிடம் போய் வேண்டிக் கொள்வதில் மாத்திரம் பயனில்லை யென்றும், இடைவிடாது தூண்டும் அவசரத்திற்கு மாறாக ஆழ்ந்ததொரு கம்பீர நம்பிக்கையின் பொறுமைநிலை நிற்கவல்ல சத்திய புருஷனே வேண்டுமென்பதும் நிச்சயமாய் உணர வருகின்றோம்.

நம் மானுடப் பெருமையை உணர்ந்தெய்திக் கொள்வதற்கு, நிரம்பிய மனிதர்மாட்டு மதிப்பினைப் போதிப்பவர் ஒருவர் இந்நாள் இல்லாதது கொடிய குறையாகும். மனிதனே ஒரு தன்மையனல்லனாய்த் தனது ஆகாரத்தில் (personality) திகைப்புக்கிடமாய பல்வேறு அம்சங்கள் கணக்கற்றுக் கலக்கப் பெற்றமைந்தவன் என்பது பிரத்தியக்ஷம். எனினும், உலோப வாழ்க்கைக்குரிய விதத்தினில் மனிதன் எளிதில் பொருந்த ஏற்றவனாதற்கு உதவும் சாதாரண நிர்வாண நிலைமைக்கு அவனை மெலிந்தினைக்கச் செய்யும்பொருட்டு அவனது ஜீவவளமையாவையும் உரிந்து விடுவதுங்கூடும். ஆனால், மனிதன் பலவேறு அம்சங்கள் ஒன்றுகூடி அமைந்தவன் என்பதை மறத்தலாகாது. ஆதலால், அவனைப்பற்றிய விஷயங்களைச் செம்மையாகத் தீர்மானம் செய்யவேண்டுமாயின், அங்கு இருக்கின்ற அவனது பலதிறப்பட்ட அம்சங்கள் ஒன்றோடொன்று இணங்கும்படி ஒழுங்குதிருத்தி வைத்தலால் ஆகுமே யல்லாது, அவனிலுள்ள நானாவிதமான தாதுக்களை அடக்கித் தடுப்பதாலும், அவனது வளர்ச்சியின் எல்லையைக் குறுக்குவதாலும் ஒருபோது மாகாது. உய்த்துணரும் புத்தியையும் ஊக்கமுள்ள பக்தியையும் அறவே அகற்றி அர்த்தமில்லாத சில சொற்களைத் திருப்பித் திருப்பிச் சொல்வதெனும் அளவிற்கு இலேசாக அடித்தடித்து நமது ஜபங்களைச் சுலபமாக்கிக் கொள்ள இயலும். நினைவைக்கூடச் செலுத்தாமல் ஒரு சக்கரத்தைச் சுற்றிக் கொண்டிருப்பதே ஜபமென்று திபத்து (Tibet) தேசத்தார் வைத்துக்கொண்டிருக்கிற ஜப சக்கிரத்தைப்போலப் பின்னும் சுலபமாக்கி வைக்கலாமே. பரீக்ஷைகளில் தம் மாணவர் தேரும்படி வழி காட்டும் திறமுடையவர்என்னும் பேர்படைத்த உபாத்தியாயர்கள், விசாரணை செய்கின்ற மனதை வாயடைத்துத் தூங்கவைத்து விஷயங்களைத் துறுத்தி நெட்டுருச் செய்விப்பதால் பாடங் கற்பிப்பதை இலேசாக்கிவிடலாகும் என்பது அறிவார்கள். தற்கால இராஜ்யதந்திரமானது (politics), தன் சேர்க்கையிலும் தான் அநுசரிக்கும் முறையிலும் தர்மாதர்ம நினைவெனும் அம்சத்தைச் (Moral element) சேரவொட்டாமல் விலக்குவதால் விளைந்தவொரு கிராதகத் தனிமையால் உலகிற்கே ஆபத்தாகி இருக்கின்றது. தொழில்வளப் பெருக்கமும் (industrialism) கூட, அழகை அலக்ஷியஞ்செய்வதால் தனது பொறுப்பை இலேசாக்கிக் கொள்கின்ற ஒரு துறவிக்கடுத்த உலோபக் கொள்கையை உடையது. ஆனால், தொழில் வளர்ச்சிக்கு இக்காலம் அமைந்துள்ள எந்திர சாதனங்களை விட்டுவிட்டு அநுசரிக்கின்ற பூர்வகால முறைகளோ, பூத சாஸ்திரங்களை ஏற்காத ஓர் மலட்டு மறுப்பினால் தமக்குரிய சுலபத்தை அடைகின்றன. மற்று, இது இம்மட்டில் மனிதத் தன்மையின் மிக்க அற்பமாய தோற்றமாகும். ஆன்மசக்தியை அதமபக்ஷ அளவிற்குள் அயர்ந்து

போம்படியல்லாது, புருஷார்த்த சாதகங்கள் நிறைவதற்கான மார்க்கம் கஷ்டமானதெனும் யதார்த்த வீரத்திற்கு எழுப்பவருகின்ற ஒருவரையே நமது உண்மைக் குருவாகத் தெரிந்துணர்கின்றோம். அப்பாதையோ துர்லபம். வாழ்க்கையின் மேலோடு மிதந்தலைகின்ற சந்துக்கள், வாழைக் கட்டைகளால் கட்டிய வொரு தெப்பத்திற்கு நிகரன்ன ஜீவனை உடையவை. ஆனால், மனித வாழ்விற்கோ, நீர் நிலம் காற்றெனும் மூன்று பூதங்களோடும் நானாவிதமாய் ஊடாடும்பொருட்டுத் துடுப்பும் சுக்கானும் பாயும், இழுக்குங் கயிறும் தள்ளும் கோலும், ஆகிய பல்வேறு ஏற்பாடுகளை யுடைய ஓர் நன்கமைத்த படகே உவமையாகும். எண்ணிறந்த விஷயங்களின் கவனமும் பரீக்ஷையும் ஆதாரமாய்க் கொண்டு எய்திய வொரு தன்னிலைகாக்கும் சூத்திரத்தை ஜட சாஸ்திரங்களினின்றும், உபயோகத்திற்கு வேண்டியவை தவிர வெறும் அலங்காரங்களை நம்முள் இருக்கும் கலையுணர்வினின்றும், அப்படகு கட்டி அமைத்துக் கொள்கின்றது. இவ்வாறு அமைந்த படகானது, பலவித வஸ்துக்களையும் சக்திகளையும் தவறின்றிச் சமச்சீர் செய்வதில் சாக்கிரதையாயிருக்கின்ற நுண்மதியையும், உபயோகம் கருதாமல் உருவத்தின் இலயத்தை இலயத்திற்காகவே கொண்டு மகிழ்கின்ற கற்பனா சக்தியுள்ள மனோபாவத்தையும், விளக்கி வைக்கின்ற தோற்றமாம். ஆன்ம சம்பூரணத் தேர்ச்சி, வாழ்க்கைச் செல்வங்கள் அனைத்தும் தன்னுள் அடங்கப் பெற்றிருக்கின்றதென்பதையும், அவ்வான்மத் தேர்ச்சியே அச்செல்வங்களுக்கெல்லாம் பொருந்திய வோர் ஒற்றுமை அர்த்தத்தைத் தருகின்றதென்பதையும் நாம் ஒருபோது மறவாமல் காத்துவர வேண்டும்.

இத்தகைய எண்ணங்கள் என் மனதைக் குடிகொண்டிருந்தபோது நான் சென்ற பிரஞ்சு கப்பல் புதுச்சேரியை அடைய, அரவிந்தரைச் சந்திக்கலாயினேன். அவரைப்பார்த்த முதற்பார்வையிலேயே, அவர் ஆன்மாவைத் தேடிவந்திருந்து அதனைப் பெற்றடைந்துளா ரென்றும், நெடுநாள் இவ்வான்ம அறிவு பெறுதற்கு அவர் முயன்று வந்த முறையினாலே, மற்றவரை ஊக்கி எழுப்புதற்கொத்தவோர் மௌனசக்தி அவருள் கூடித் திரண்டிருக்கின்றதென்றும் தெரியப் பெற்றேன். உள் நின்றவோர் ஒளி அவர் முகத்தில் மிளிர்ந்தது. உயிரைப் புண்படுத்துவதில் உவகை கொள்ளும் குரூரம் வாய்ந்த கோட்பாடுகளுக் கிணங்கி அவரது ஆன்மா நசுங்கி முடமாகவில்லை என்பதற்கு அவர்தம் சாந்தச்வரூபமே சான்றாகும். சுயநலமிகுதிக்கு இரட்டைச் சகோதரியாய் முதுகொடு முதுகு ஒட்டிக்கொண்டு எதிர்முகம் நோக்குவதாகிய சுயவதைச் செருக்கினால் வெறிகொண்டாடும் ஐரோப்பிய துறவிகளில் கிறிஸ்தவ சந்நியாசிகளின் முறையை அரவிந்தர் ஒருநாளும் கற்றவரல்லர் என்பது நிச்சயம்.

மனித ஆன்மா நிகிலத்தூடு பிரவேசிக்குமாறு அதற்குச் சுதந்திரம் அளிக்கின்ற அந்தச் சாந்தியைப்பற்றிய பண்டைநாள் இந்திய இருடிகளின் வசனம் அவர் மூலமாய்ப் பேசலாயிற்றென்று உணர்ந்தேன். உணர்ந்து, "ஒரு தனிச்சொல் நும்பால் உளது; அதனை நும்மினின்று ஏற்றுக்கொள்ள யாங்கள் காத்திருக்கின்றோம். என்னுரை கேளென்று நும் குரல்கொண்டு இவ்விந்தியா உலகத்திற்குச் சில பேசுவதாகும்," என்று அவருக்குச் சொன்னேன்.

ஆதியில் தான் வாழ்ந்த வனத்திலே சகுந்தலை தன் அமைதியற்றாடிய இளமையில் வாழ்வின் தன்மையை விழித்துணரலாயினள். பிறகு ஆசிரமத்தின்கண் வாழ்க்கையின் நிறைவை எய்தினள். அனேக ஆண்டுகளுக்கு முன் அரவிந்தரை நான் அவரது ஆதிவீர வாலிபத்திற்கிடையே கண்டு

"அரவிந்த, இரவீந்திரநாதனின் வந்தனமி
தேற்றுகொள்"

என்று அன்று ஏத்தினேன். இன்றைக்கு ஞானமெனும் மௌனச் செல்வத்தில் ஆழ்ந்திருக்கக் கண்டேன். கண்டு,

"அரவிந்த, இரவீந்திரநாதனின் வந்தனமி
தேற்றுக்கொள்"

என்று மௌனமாய் இன்றும் ஏத்தினேன்.

இரவீந்திரநாத தாகோர்.

வானசாஸ்திரம்.

189010

(397-ம் பக்கத் தொடர்ச்சி.)

சூரியன்.

மேற் சொல்லிய சூரியனுடைய ஒளிக்கோளத்தைச் சுற்றி ஏறக்குறைய 500 மைல் உயரத்துக்குச் சற்றுக் குளிர்ந்த வாயுக்கள் கலந்த படலம் ஒன்று இருக்கிறது. சூரியனுடைய பரிமாணத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது ஒரு மென்மையான திரையைப் போன்றதன்று. இது நேராகப் பார்க்கத் தக்கதுவு மன்று. சூரிய கிரகண காலங்களில் சந்திரன் சூரியனுடைய ஒளிகோளத்தை முற்றாய் மறைத்து மேல்நகரும்போது ஸ்பெக்ட்ரஸ்கோப் என்னும் ஒளிப் பரிசோதனைக் கருவியில் காணப்படும் ஸ்பெக்டரம் ஒரு மாத்திரையளவு காலம் கீழ்மேலாக மாறித் தோற்றுகிறது. இந்த மாற்றம் உண்டாவதற்குக் காரணம் மேற்கூறப்பட்ட வாயுப் படலமாயிருத்தல் வேண்டுமென்றும, இந்தமாற்றம் நிலைத்திருக்கும் கால அளவையிலிருந்து இதன் அளவு 500 மைலுக்குமே லிராதென்றும் கணக்கிட்டிருக்கிறார்கள். இப்படலம் இதற்குக் கீழ்மேல் இருக்கும் நிலைமையுடன் ஒத்து நோக்கும்போது மிக அமைதியான நிலையில் இருக்கிறதாகத் தெரிகிறது. இதற்குத் தலைகீழ்படலம் (Reversing Layer) என்று பெயர்.

இதற்குமேல் மற்றொரு வாயுப்படலம் சூழ்ந்திருக்கிறது. இதன் உயரம் 5000 மைலுக்கும் 10000 மைலுக்கு மிடையில் என்று கணித்திருக்கப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன படலத்தைப்போ லில்லாமல் இது சூரிய கிரகண காலங்களில் இரத்த நிறமான வரியாய்ச் சூரியனைச் சுற்றியிருப்பதைக் காணலாம். இதற்கு வர்ண கோளம் (Choromosphere) என்று பெயரிட்டிருக்கிறார்கள். இப்படலத்தில் கலந்திருக்கின்றவை ஹைட்ரிஜின் கால்ஸியம் ஹீலியம் என்னும் பொருள்களே. சிவப்புநிறம் எரிகிற ஹைட்ரிஜினுக்கு உரிய தன்மையினால் இப்படலத்துக்கு ஏற்பட்டது.

வர்ண கோளத்துக்கு மேற்புறம், கொந்தளித்து அலையெழும்பும் கடலைப் போன்றிருக்கிறது. இதனிலிருந்து சுவாலித்தெழும்பும் அலைகள் அநேக மாயிரம் மைல் உயர முள்ளன. சில சமயங்களில் 300000 மைல் உயரத்துக்கு இவைகள் கிளம்புகின்றன. இவைகளில் சில சடிதியிற் அதிவேகத்தோடு மேற்சென்று விரைவில் எழும்பி உருமாறிப் போகின்றன. மற்றும் சில அவ்விதம் இல்லாமல் சூரியனைச் சுற்றி மரங்களைப் போல நின்று மெதுவாய் உருமாறுகின்றன. முந்தியவைகள் எரிகிற வாயுத் திரள்கள், உள்ளிருக்கும் ஏதோ சக்தியினால் அதிவேகத்துடன் மேற் கிளம்புகின்றவைகளாம். சில சமயங்களில் இவைகளின் வேகம் நிமிஷம் ஒன்றுக்கு 30000 மைல் வரையில் எட்டுகிறது. இவைகளுக்கு முனைகள் (Prominences) என்று பெயர். தொடக்கத்தில் இவைகள் பூரண சூரிய கிரகண காலங்களிற்றான் காணத்

தக்கவாயிருந்தன. இப்போது கிரகணங்களில்லாத காலங்களிலும் இவற்றைப் பற்றிய ஆராய்ச்சி செய்வதற் கேற்ற கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பூரண சூரிய கிரகண காலங்களில் இதுகாறும் சொல்லி வந்தவைகளைப் போலப் படலமாய் இராமல் வெள்ளொளியாய்ச் சூரியனைச் சுற்றியிருக்கும் ஒருபாகம் தெரிகிறது. இதை ஒளிவட்டம் (Corona) என்று சொல்வது. இதன் தன்மை முற்றாய்த் தெரியவில்லை. இது எவ்வளவோ தூரம் பரவி ஆகாய வெளிக்குள் தேய்ந்து போகிறது. இதில் சிறு அணுக்கள் வாயுவுடன் கலந்து பரவியிருக்கிறதென்பது ஒன்றுதான் இதைப்பற்றி நிச்சயமாகச் சொல்லக் கூடியது. அவ்விதம் இருக்கும் அணுக்களும் அடர்ந்திராமல் பரவியிருக்கின்றன. இந்த அணுக்குள் ஒன்றிலிருந்து மற்றொன்று பத்தடி தூரம் வரையில் இருக்கவேண்டு மென்பது துணிபு.

பூமியிற் காணப்படும் தாதுப் பொருள்கள் அனேகம் சூரியனிடமும் இருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் பூமியிலுள்ளபொருள்களிற்சிலசூரியனிலிருப்பதாகத் தெரியவில்லை. இதிலிருந்து அப்பொருள்கள் இல்லையென்று நிச்சயமாய்க் கூறமுடியாது. அவைகள் வேறு மாற்றங்கள் அடைந்திருக்கலாம், அல்லது சோதனைகளுக்கு எட்டா மலிருந் திருக்கலாம். மற்றும் அண்டங்களிலும் பூமியிற் காணப்படும் தாதுப் பொருள்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அண்டங்கள் எல்லாம் ஒரேவகையான அமைப்புள்ளவை என்று சொல்வது, பிழையாகாது. இதைப்பற்றிப் பின்னால் விவரிப்போம்.

இதுவரையும் சூரியனைப்பற்றி வானசாஸ்திர மறிந்தவற்றுள் சில விஷயங்களை எடுத்துச் சொல்லிவந்தோம். இதற்குமேல் அறிய ஆவலிருப்பின் இதைப்பற்றி விபரமாய்க் குறிக்கும் நூல்களைப் படித்துத தெரிந்து கொள்ளலாம்.

சந்திரன்.

வானிற்றோன்றும் சோதிகளிலெல்லாம் சூரியன் தவிர பூமிக்கு ஒளியைக் கொடுத்து மனதுக்கு இன்பத்தை ஊட்டுகின்ற சோதி சந்திரனே. அது தண்ஒளி காலுவதாலாலும் தேய்ந்து வளர்வதுபோலத் தோற்றுவதாலும் சந்திரனைப்பற்றிய புராண காவிய வரலாறுகள் அனேகம் நமது இலக்கியங்களி லிருக்கின்றன. இவைகள் எல்லாம் கவிகளின் மனோபாவங்களே யாயினும் மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கின்ற தன்மையுடையவையா யிருத்தல்பற்றித் தள்ளிவிடத் தக்கவைகளல்ல. எனினும் சந்திரனுடைய மெய்யான தன்மையைத் தெரிந்துகொள்வதும் தகுதி உள்ளதே.

சந்திரன் பூமியைச்சுற்றிச் சென்றுகொண்டிருக்கும் ஒரு உபகிரகம் என்று சொல்லியிருக்கிறோம். பூமியின் பரிமாணத்தில் ஏறக்குறைய $\frac{1}{18}$ பாகமுள்ள ஒரு அண்டம் சந்திரன். அதன் ஒளி சுய ஒளி அல்ல. சூரிய வெளிச்சம் அதில்பட்டு பிரதிபிம்பிப்பதே நமக்குச் சந்திரவெளிச்சமாய்க் கிடைப்பது. அதுபோலவே நமது பூமியில் தாக்கும் சூரியவெளிச்சமும் சந்திரனிலோ வேறு கிரகங்களிலோ இருந்து பார்ப்பவர்களுக்குப் பூமியின் ஒளிபோலத் தோன்றும். மற்றக் கிரகங்களின் ஒளியும் இத்தன்மையதே. சந்திரன் வளர்ந்து தேய்வது போலத் தோற்றுவதற்குக் காரணம் அது பூமியைச் சுற்றி வருவதனாலேயே. சந்திரன் பூமியைச் சுற்றிவர ஒரு மாதம் செல்கின்றது. அவ்விதம் சுற்றிவருகையில் பூமிக்கும் சூரியனுக்கு மிடையில் வரும்போது சூரிய வெளிச்சம் சூரியனுக்கு எதிரான பக்கத்தில் படுகிறதனால் பூமியிலுள்ளவர்களுக்குச் சந்திரன் ஒளியற்றுப்போய் விடுகிறதாய்த் தோற்றுகிறது. இதுதான் அமாவாசை. இந்த நிலையிலிருந்து விலகும்போது நாளுக்குநாள் சந்திரனில் சூரியவெளிச்சம் படும் பாகம் அதிகமதிகமாக நமக்குத் தோன்றிப் பூரணையன்று அது முற்றாய் நமக்கு எதிராக வருகிறது. பூரணையில் சந்திரன் தன்பாதையில் சரிபாதி சென்று சூரியனுக்கு எதிர்முகமாக வருகிறது. பூரணைக்குப்பின் அது மறுபடியும் சூரியனைக் கிட்டிவருவதனால் சந்திரனில் ஒளிவீசும்பாகம் பூமியிலுள்ளவர்கள் காட்சிக்குக் குறைந்துகொண்டுவருகிறது. இதைப்பற்றியபுராணக் கதை எல்லாரு மறிந்திருப்பர். சந்திரன் தேய்ந்து வளர்வதில்லை என்பதற்கு ஒரு அத்தாட்சி பிறைச்சந்திரனை நாம் பார்க்கும்பொழுது மிகமங்கலான வெளிச்சமுடையதாய் முழுச் சந்திர வட்டமும் நமக்குத் தோற்றுகிறது. இந்த மங்கலான ஒளி பூமியிலிருந்து சந்திரனிற்படும் பூமி ஒளியே.

சந்திரனைப்பற்றிய ஒரு விசேஷம் கவனிக்கத் தக்கது. பூமியிலுள்ளவர்களுக்குச் சந்திரன் எக்காலத்திலும் ஒரே முகமாய்த் தோன்றுகிறது. அதன் மற்றைய பாகம் நமக்குத் தெரிகிறதில்லை. இதன் காரணம் என்னவெனில் பூமியைச்சுற்றி வருவதுடன் சந்திரன் சுழற்சியுடையது என்று சொல்லியிருக்கிறோம். இச்சுழற்சிக்காலமும் சுற்றோட்டக் காலமும் ஒன்றாயிருப்பதனால் எக்காலத்திலும் சந்திரன் பூமிக்கு ஒரேபாகத்தையே காட்டிக்கொண்டிருக்கிறது. இப்போது சந்திரன் சுழல்கின்ற வேகத்தைப் பார்க்கிலும் அதிக வேகமாய்ச் சுழலுமானால் நாம் சந்திரனுடைய எல்லாப் பாகங்களையும் பார்க்கமுடியும். ஒரு காலத்தில் சந்திரன் அதிவேகமாய்ச் சுழன்று கொண்டிருந்திருக்க வேண்டும். நாளடைவில் அதன் வேகம் பூமியின் ஆகர்ஷண சக்தியால் குறைந்துவிட்டது என்பது வானசாஸ்திரிகளின் துணிபு.

சந்திரனுடைய சுழற்சிக்காலமும் சுற்றோட்டக்காலமும் ஒருமாதம். சந்திரன் ஒருமாதத்தில் பூமியைச சுற்றிவருவதனால் சூரியன் ஒருவருஷத்தில் சுற்றிவருவது போலிருக்கும் ஆகாயத்தைச் சந்திரன் ஒருமாதத்தில் சுற்றுவது போலிருக்கிறது. பன்னிரண்டு இராசிகளிலும் அவைகளில் சந்திரன் அன்றன்று சேர்ந்துவரும் இருபத்தேழு நக்ஷத்திரங்களோடும் மாதமொருமுறை சந்திரன் ஒருமுறை இருக்கிறதைக் கவனித்தால் இது விளங்கும். சூரியன் பன்னிரண்டு ராசிகளையும் கடந்துசெல்ல ஒரு வருஷம் செல்கின்றது.

சந்திரனில் மறு இருக்கிறதை வெரும் கவனித்திருப்பர். இதைப்பற்றிய கதைகளும் அனேகம் உண்டு. ஆனால் இம் மறுக்களைப்பற்றிய உண்மையான விபரம் பண்டைநாளில் எவருக்கும் தெரிந்ததில்லை. தூரதிருஷ்டியின் மூலமாய்ச் சந்திரனைப் பரிசோதனை பண்ணிய முந்திய வானசாஸ்திரிகளுக்கும் இதன் விபரம் தெரியவில்லை. இப்போது இம் மறுக்கள் சந்திரனிலுள்ள உயர்ந்த மலைகளின் நிழல்கள் என்பது எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. சந்திரனைத் தூரதிருஷ்டியின் மூலமாய்ப் பார்த்தால் வெண்மையாய்ப் பிரகாசிக்கிற சந்திர மண்டலத்தில்இடையிடையேஇருளடைந்த பாகங்களும் இப்பாகங்களுக்குள் இடையிடையே பிலவாய்கள் போன்ற வட்டமான கறுத்த மறுக்களும் தோன்றுகின்றன. ஆரம்பத்தில் இவ்விருள் அடைந்த பாகங்களைக் கடல்கள் என்று எண்ணியிருந்தார்கள். அது சரியான கொள்கையல்ல வென்பது பின்னால் ஸ்தாபிக்கப்பட்டது. இருளடைந்த பாகங்கள் மலைகளின் சாயல். வட்டமாகத் தோற்றுவன பெரிய பிலத்துவாரங்கள். சில துவாரங்களின் குறுக்களவு 100மைலுக்கு மேலிருக்கின்றதென்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இவ்விதமான பிலவாய்கள் 30000க்குமேல் சந்திரனில் காணப்படுகின்றன. இந்தப் பிலத்துவாரங்கள் உயர்ந்த மலைகளின் உச்சியிலேயே இருக்கின்றன. ஆகையினால் ஒரு காலத்தில் இவைகளெல்லாம் எரிமலைகளா யிருந்திருக்குமோ வென்ற சந்தேகமும் உண்டு. சந்திரனில் உள்ள மலைகள் மிகுதியாய்த் தனித்தனி உயர்ந்த மலைகளாயிருந்த போதிலும் தொடர்ச்சியாயுள்ள தொடர் மலைகளும் காணப்படுகின்றன. இம்மலைகளின் உயரம் பூமியிலுள்ள மலைகளைப் பார்க்கிலும் அதிகமாயிருக்கிறது. 36000 அடி உயரமுள்ள மலைச்சிகரம்இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இவைகளை எவ்விதம் கணக்கெடுக்க முடியுமென்ற சந்தேகம் ஏற்படலாம். இது மிகவும் சுலபமான ஒருகாரியம். சூரியன் நிற்கும் நிலையையும் இம்மலைகள் அப்போது காட்டும் நிழலையும் அளந்து கொண்டால் இம்மலைகளின் உயரத்தைக் கணித்துக்கொள்வது இலேசான காரியம்.

சந்திரனிடத்தில் சமுத்திரங்களாவது வாயுமண்டலமாவது இல்லை என்பது துணிபு. ஆகவே சந்திரனில் பூமியிலுள்ள சீவவர்க்கங்களைப் போன்ற சீவவர்க்கங்கள் இல்லை என்று சொல்லலாம். வாயுமண்டலம் இல்லாமையால் சூரியவெப்பம் தாங்கமுடியாத அளவுக்குப்போகின்றது. இராத்திரிகாலத்தில் பனிமூடிய வடபாகங்களிலிருக்கும் குளிருக்கு இரண்டுபங்கு அதிக குளிராயிருக்க வேண்டும். மேலும் நீரில்லாத் தன்மையால் சீவராசிகள் வளர்வதற்கேற்ற ஏதுக்கள் இல்லை.

(தொடரும்)

அகத்திய முனிவர்.

(514-வது பக்கத் தொடர்ச்சி)

அகத்திய முனிவர் சிவபெருமானைப் பூசித்துக் கொண்டிருக்கையில் பக்கத்தில் காவிரி ஆவாகித்து வைத்திருக்கும் கமண்டலத்தின்மேல் ஓர் காகம் வந்துட்கார்ந்து கமண்டலத்தைக் கவிழ்த்தது. உடனே உள்ளிருக்கும் காவிரி ஒரு பெரிய நதியாகப் பெருகி ஆர்ப்பரித்து ஓடத்தொடங்கியது. முனிவர் தன் கமண்டலத்தைக் கவிழ்த்தவன் யாவனென்று பார்த்தார். காகம் ஓர் பிரம்மசாரியாக மாறிற்று. அதுகண்ட முனிவர் தன் கரகங் கவிழ்த்தவன் அப்பிரமசாரியே யென்று சினங்கொண்டு துரத்தச் சென்றனர். விநாயகப் பிரம்மசாரியைக் குறுமுனிவராற் பிடிக்க முடியவில்லை. களைத்து நின்றார். உடனே அப்பிரமசாரி அருகில்வந்து தான் விநாயகரென்று சொல்லித் தன் நிஜ ரூபத்தைக் காட்டி மறைந்தருள, முனிவர்கண்டு இது விநாயகரின் திருவிளையாட லென்றெண்ணி மகிழ்ந்தனர்.

விநாயகர் வந்து கரகத்தைக் கவிழ்த்த காரணம் அடியில் வருமாறு. இந்திரன் சூரபன்மாதியருக் கஞ்சிச் சீர்காழி நந்தவனத்தில் மூங்கில் வடிவொடு தவஞ்செய்து கொண்டிருந்தான். அவனிடம் நாரத முனிவர் சென்று அகத்தியர் தென்திசைக்கு வந்திருக்கும் வரலாற்றையும் அவர் கமண்டலத்தில் காவிரி யிருப்பதையுங் கூறி "நீ விநாயக மூர்த்தியை வேண்டினால் அவர் காவிரியைப் பெருகச் செய்வார். அவராலன்றி வேறொருவராலுமாகாது. அதனால் உன் நந்தனவனம் செழிப்படைவது மன்றி உலகமும் நன்மையடையு மென்றார். இந்திரனுமவ்வாறே செய்தான். அதனால் விநாயகர் சென்று பெருகச செய்தாரென்று கந்தபுராணத்திற் கூறப்பட்டுள்ளது.

"எண்டிசையு மேழுலகு மெவ்வுலகு முய்யக்
குண்டிகையி னிற்பொருவில் காவிரி கொணர்ந்தான்."

என்று பொதுவாகக் கம்பநாடருங் கூறியுள்ளார்.

இவ்வரலாறு காவிரி மகாத்மியத்தில் வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது. அது வருமாறு. இராஜவிருடியும் யோகிகளிற் சிறந்தவருமான கவேரன் முக்திபெறுதலை விரும்பிப் பிரமதேவரைக்குறித்துக் கடுந்தவஞ்செய்தான். பிரமதேவரருளால் விஷ்ணுமாயையைத் தன் புத்திரியாகப்பெற்றுப் பின் முக்தியடைந்தான். பிறகு அக்கன்னி பிரம்மதேவரின் கட்டளையின்படி நதி வடிவுகொண்டு பிரவாகித்தாள். இதுபற்றியே காவிரி நதிக்குக் கவேரி கன்னியென்று பெயர் வந்தது என்பதாகும். மணிமேகலையில் சாத்தனாரும்,

" தவாநீர்க் காவிரிப் பாவைதன் றாதை
கவேரனாங் கிருந்த கவேர வனமும் " என்று

கவேரனைக் காவிரியின் தந்தை யென்றும் பிறவுங் கூறியுள்ளார். இவ்வரலாறு முன்னையதற்கு முற்றும் மாறுபாடா யிருக்கின்றது. தவிர, அச்சாத்தனாரே ஆங்கு வேறோரிடத்து ;

" செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை " என

சூரியகுலத்து வந்த காந்தமனென்னுஞ் சோழன் நீருண்டாக்கும் விருப்பத்தோடு அகத்திய முனிவரை வேண்ட, முனிவர் தன் கரகத்தைக் கவிழ்த்தியருளினர்' என்று கூறியிருக்கின்றார். இவ்வாறு ஒரு ஆசிரியரே தமது நூலில் இருபிரிவாகப் பொருள் படும்படிக் கூறியுள்ளார்.

" மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
தன்முன் தோன்றல் தகாதொழி நீயெனக்
கன்னி யேவலிற் காந்த மன்னவன்
இந்நகர் காப்போர் யாரென நினைஇ
நாவலந் தண்பொழி னண்ணார் நடுக்குறக்
காவற் கணிகை தனக்காங் காதலன்
இகழ்ந்தோர் காயினு மெஞ்சுத லில்லோன்
ககந்த னாமெனக் காதலிற் கூஉய்
அரசா ளுரிமை நின்பா லின்மையின்
பரசு ராமனின் பால்வாந் தணுகான்
அமர முனிவன் அகத்தியன் தனாது
துயர்நீங்கு கிளவியின் யான்தோன் றளவுங்
ககந்தன் காத்தல் காகந்தி யென்றே
இயைந்த நாம மிப்பதிக் கிட்டீங்கு
உளவரி கொண்ட உரவோன் பெயர்நாள்.

என்ற தொடக்கத்தின் அறிமுகங்களால் இக்காந்த மன்னன் பரசுராமனுக்குப் பயந்து தூர்க்காதேவியின் கட்டளைப்படி காவிரிப்பூம் பட்டினத்தைக் கணிகை காதலனாகிய ககந்தனுக்கு ஒப்படைத்துவிட்டு அகத்திய முனிவரின் அருள் பெற்று வரச் சென்றான். அம்முனிவரும் தன்பா லன்புகொண்ட காந்தனை, அரசர் குலத்தை முடிக்கக் கங்கணங் கட்டிக்கொண்ட பரசுராமன் கொல்லாமற் காத்தார்—

இதனா லகத்தியமுனிவர் பரசுராமன் காலத்திற்கு முன்னமே தென்னாடு வந்தமைந்தன ரெனவும், சோழர் குலத்தரசனைக் காப்பாற்றினாரெனவும், அம்மன்னவன் வேண்டுகோளாற் கமண்டலத்திலுள்ள காவிரியைச் சோழநாடு நீர்வள நாடாகும் பொருட்டு நிலத்திற் பெருகச் செய்தாரெனவும் பிறவும் விளங்குகின்றன. தவிர, கவேரகன்னியாகிய காவிரி என்பவளை அகத்திய முனிவர் மணஞ் செய்துகொண்டு ஒரு கணமும் பிரியேனெனக்கூறிப் பின்னொருநாள் சந்திமுடிக்க ஓர் தீர்த்தத்திற்குச் சென்றிருந்தபோது அவள் முனிவர் பிரிவுக்காற்றாது வருந்தி ஒரு மடுவில் வீழ்ந்து நதியாகப் பிரவாகித்தாளென்று சொல்வது முண்டு.

இவ்வரலாறுகளைச் சரித்திரத்திற் கியைத்தாற் பொருந்துவனவல்ல. புதிதாக ஓர் யாறு வெட்டிக் கொண்டு வருதல் பலராலுமியலாத காரியம். மலைகள் நதிகள் முதலியன உண்டாயிருத்தல் இயற்கையின் செயலேயாகும். மேகங்கள் கடல்நீரை மொண்டு மலையிற் சென்று பெய்தலால் பாந்த நீர்த்திவலைகள் ஒருங்கு சேர்ந்து பலதுளி பெருவெள்ள மென்றபடி சிற்றொழுக்காய், அவைபல ஒன்றுகூடி பெரும் பிரவாகமாய்ப் பள்ளத்தாக்குகளின் வழியாகத் தாழ்ந்த விடங்களுக்குப் பெருகிவரும் நீரொழுக்கிற்கு நதியென்று பெயர். முனிவர்பிரான் ஆங்குவருமுன் இக்காவேரிநதி இல்லையென்று சொல்லமுடியாது. நதி யில்லையேல் மழை முதலியன இல்லாதிருக்க வேண்டும். அங்ஙனமின்று. ஆயின் இந்நதிக்குக் காவிரி யென்னும் பெயரின்றிக் காட்டா றென்றிருக்கலாம். அக்காட்டாற்றின் நீரும் நாட்டிற் குபயோகமற்று வறிதேயுஞ் சென்றிருக்கலாம். சையமலைக்கு வந்த முனிவர் அவ்வாறு வறிதே உபயோகமற்றுச் சென்று கழியும் நீரொழுக்கைத் தம்முடன் வந்தவர்களை வைத்து ஒருமுகப்படுத்தி நாடு வழியாகப் பாயுமாறு விடுத்து, அதைத் தான் கொண்டுவந்த கங்கை நீரால் சுத்தி செய்து அதற்குக் காவிரி யெனப் பெயரும் வைத்தனரென்று சொல்வது பொருத்தமாகும்.

" காவனுக்கிது வழக்கென வுரைத்த விவனுங்
காவிரிப்புனல் கொணர்ந்த விவனும் "

என்ற தொடக்கத்தன இக்கூற்றை வலியுறுத்தும்.

என்ன விந்தை? முனிவர் பிரானின் ஒவ்வொரு செய்கையும் பல்வேறு கூறுகளாகப் பிரிந்து ஒவ்வொரு வரலாற்றிற்குங் காரணமாயிற்று. இதனுண்மை அம்முனிவர்பாற் கேட்டாலன்றி பிறவாற்றால் வெளியாகாதென்பது சொல்லாமலே யமையும். முனிவருங் காலக்கிரமத்தில் வந்து பார்த்தால் இஃதென்னைகொ லென்று பிரமித்துப் பிறகு நகையாடா திருப்பரோ?

அப்பா லவர் தென்றிசைக்குத் திரும்பி வரலாயினர். வழியில் ஓர் ஆலமரத்தில் அநேக இருடியர் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் தம் மரபினரென்று தொன்னூலுரை முனிவ ரறியா தருகிற் சென்று "ஐயன்மீர்! இவ்வாறு நீவிர் தலைகீழாகத் தொங்குவதற்கு நியதி யென்னைகொல்" என்று வினவினர். அதற்கவர்களும் கேட்பவன் தங்குடும்பத்தின

னென்று தெரியாமல் "யாம் அகத்தியன் குடும்பத்தைச் சேர்ந்த பிதுர்க்கள்; அவன் கிரகஸ்தாசிரமத்தைச் சேர்ந்து,

" தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தா
கைம் புலத்தா றோம்பல்தலை" [னென்றுங்

என்கிறபடி எங்களுக்கேற்பட்ட கடன்களை முதலிற் செய்யாததால் இவ்வாறு யாம் துயருறுகின்றோம்" என்று பலவாறு துயருற்றுக் கூறினர். அதைக் கேட்ட அகத்திய முனிவர் மனத்துயருற்று இனிக் காலந் தாழ்க்காது விரைவில் மணஞ் செய்துகொண்டு தென்புலத்தாரை ஈடேறச் செய்ய வேண்டுமெனப் பெண் தேடலாயினர். சொல்வல முனிவர்,

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் "

என்ற விலக்கணத்திற் பொருந்தின பெண் வாய்க்க வேண்டும்; இல்லையேல் நமது துறவறம் நன்று. இல்லாள் சீர்கேடி யாயின் இல்வாழ்க்கை பழுது படுவதுமன்றிப் பாரும் அதனைப் பழித்துக் கூறும். நந்தன்மைக் கேற்றவாறிருக்கவேண்டும் நம்மனைவி யென்றெண்ணிப் பெண் தேடி வருங்காலத்து விதர்ப்ப நாடடைந்தார். அந் நாட்டரசன் செய்த யாகத்தில் அவனுக்குப் புத்திரியாகத் தோன்றின லோபாமுத்திரையை அவ்வரசன் மூலம் மணம் பேசித் தக்க நாளில் மணஞ் செய்து கொண்டு இல்லறத்திலிருந்து முதலிற் செய்ய வேண்டிய தென்புலத்தார் கடன்களை நிறைவேற்றினர்.

" துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை "

என்ற முறைப்படியும், ஏனைய இல்வாழ்வுக்குரிய முறைப்படியும் ஒழுகி அவர் வருங்கால் தென்புலத்தா ரீடேறினதோடு அனைவரு மாசிகூறிப் புகழ்ந்தனர். காஞ்சிப் புராணக்காரர், "பொச்சமின் மனையாளோடு வானெறிப் போதுகின்ற" என்று அகத்திய முனிவர் விந்திய மலையை யடக்க வரும் போதே உலோபாமுத்திரையாரோடு வந்தனரென்று கூறியுள்ளார். இதனால் அவர்க்குத் தென்னாடு வருமுன்னமே விவாக மாயிற்றென அறியக் கிடக்கின்றது.

" எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின் "

என்றபடியும், இல்வாழ்க்கைக் கழகு பண்படை மக்கட் பேறுதலாலும், 'அபுத்ரஸ்ய கதிர் நாஸ்தி' என்றபடி மக்கட்பே றில்லாதவன் ஈடேற மாட்டானுதலாலும்,

" தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும் "

என்றபடி தகுதியுடையவ னென்றும் தகைமை யற்றவனென்றும் ஒருவனுடைய எச்சத்தா லறியப்படுமாதலாலும் புத்திரப் பேறு மேன்மை யென்று கருதின மகத்தியமுனிவர். அவ்வளவில் உலோபாமுத்திரையார் கருவுற்று ஓர் புதல்வனைப் பெற்றான். அப்புதல்வனுக்குத் திராடாஸ்யு என்று பெயரிட்டனர். இத்திராடாஸ்யுவே தன் தந்தையின் ஓமசாலைக்குச் சமிதைகள் தயார்செய்துகொடுக்கும் காரணம்பற்றி "இத்மவாஹன்" என்றழைக்கப்பட்டா னென்பர். இவன் சரிதை வேறொன்றும் புலப்படவில்லை. மத்ஸ்ய புராணத்தின் 22-வது அத்தியாயத்தில் அகத்தியமுனிவருக்கு எட்டுக் குழந்தைகள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. கந்தபுராண வாசிரியர்,

" அத்தனங் கொருவ வன்று
னருளடைந் தங்க ணீங்கி
மெய்த்தகு மதலை வேண்டி
விதர்ப்பகோன் பயந்த லோபா
முத்திரை தனைமுன் வேட்டு
முதுக்குறைத் திண்மை சான்ற
சித்தனை யளித்த வள்ளல்
தென்றிசை நோக்கிச் சென்றார் "

என்று கூறியுள்ளார்.

அகத்திய முனிவருடைய பிறப்பு வரலாற்றைக் குறித்த சந்தேகங்கள் இவ்வாறென வறிந்தோம். அவர் மனைவியாக வமைந்த உலோபாமுத்திரையாரைக் குறித்தும் இங்குச் சிறிதளவேனுங் குறியாதிருத்தல் தக்கதன்று. இவ்விருவருடைய பிறப்புரிமையை மட்டும் வைத்துப் பார்க்கின் இவர் தம்முள் மணஞ் செய்துகொள்ள உரிமையுடையவ ரென்பதறியலாகும். அகத்திய முனிவருடைய பிறப்பைப்போல அவர் மனைவியாரின் பிறப்பும் ஐயமின்றி அறிய முடியவில்லை. அவ்வொரு தன்மையி லிவ்விருவரும் மிக்க ஒற்றுமையுடையாரெனக் கூறலாகும். புலத்தியரின் தங்கையெனக் கூறுகின்றனர் சிலர். விதர்ப்ப ராஜனுக்கு மகளாக வமைந்தனளென முற்கூறினோம். இவ்விருதிறத்தாலின்றி மற்றொரு விதங் கூறுமாறு.

அகத்திய முனிவரே அநேக மிருகங்களின் அழகுகளையெல்லாம் ஒருங்குதிரட்டி ஒரு பெண் உண்டு பண்ணினர். பிறகு அவள் விதர்ப்பராஜ னரண்மனையில் ரகசியமாக விடப்பட்டு வளர்ந்து வந்தாள். நாளடைவி லவ்வழகியை மணக்க வெண்ணி விதர்ப்ப மன்னனிடம் வந்து மணம்பேசிக் கலியாணஞ் செய்து கொண்டனரென்பர். தவிர, முனிவர் அவளைச சேரவருங்கால், அவள் தனக்களவற்ற தனம் வேண்டு மென்று கூற, அதற்காக அவர் வில்வலனை வென்று அவனிடமுள்ள திரவியத்தைக் கொண்டு வந்து திருப்திப் படுத்தினாராம். இக்கூற்றினால் அகத்தியமுனிவரின் தன்மையும் அவர் மனைவியின் தன்மையும் சாமானிய மனிதரின் நடத்தையிலும் குறையுபட்டுள்ள தென்றெண்ண இடமுளது. விருப்பு வெறுப்பற்ற முனிவர்பெருமான் இவ்வாறு செய்திருக்கமாட்டார். கற்பிற் சிறந்தவளும் செல்வத்திற் செழித்தவளுமான அம்மாதரசி அவ்வா றொருபொழுதும் கேட்டிருக்க மாட்டாள். ஒருவேளை கேட்டிருப்பினும் மேருமலையிலிருந்து குபேர நண்பரான சிவபெருமான் வேண்டுகோட்படி அவரையே நிகர்த்த முனிவர் வில்வலனைச் சயித்துத் திரவியந் திரட்டிக் கொடுக்கவேண்டு மென்ற கட்டாய மில்லை. சித்தாய் நினைத்த வளவில் எதையும் ஆக்க வழிக்க வன்மை பெற்ற முனிவர் ஒருவனைக் கெடுத்துப் பொருளைக் கொடுத்திருக்க மாட்டார். ஆதலால் இங்ஙனமொத்த பிற்காலத்தார் கற்பனைகளாற் பெருமை மிக்க முனிவர்க்குச் சிறிது குறைவேற்பட்டு விட்டது மன்றி உண்மை யறியவும் முடியாமற் போய்விட்டது ஆயினும் 'கழிமடமுஞ் சான்றோர்க் கணி' என்றபடி இது போலொத்த வரலாறும் சான்றோர்க் கணியைக் கொடுப்பதன்றி யுலகிற்கு நன்மையுமாகு மென்க. நிற்க.

(தொடரும்) R. முத்தையர்.

கம்ப ராமாயணம்

பால காண்டம்

6 கையடைப் படலம்

[512-ம் பக்கத் தொடர்ச்சி]

கதையில்லை தயரதனே அறவேந்த னல்லாக்கால்.

தயரதன் தன் ஆத்தாணி மண்டபம் நண்ணலோடும் இக்களம் திறக்கின்றது. அரசனு மரியணை பொலிவுற அமர வரமுனி கோசிகன் வந்தவண் சேர்ந்தான். ஆங்கே, மன்னவன்,

வந்துமுனி யெய்துதலு மார்பினணி யாரம்
அந்தரத லத்திரவி யஞ்சவொளி விஞ்சக்
கஞ்சமல ரிற்கடவு டன்வரவு காணும்
இந்திரனெ னக்கடிதெ ழுந்தடி பணிந்தான்.

பிரம்மதேவனை எதிர்கொண்டழைக்கும் இந்திரனைப் போல் தயரதன் விச்வாமித்திரனை வரவேற்றான் என்னும் இவ்வுவமையின் பொருத்த வழகைக்கண்டு கம்பர் வடமொழி முதனூலிலிருந்து எடுத்தமைத்துக் கொண்டனர். எனினும், எந்த முனிவனை எந்தவரசன் எதிர்கொண்டழைப்பதற்கும் இவ்வுவமை ஏற்றதாகு மாதலால் அது தன்கதை வருபாத்திரங்களாகிய விச்வாமித்திரனிற்கும் தசரதனிற்கும் சிறப்பாக அடையும்பொருட்டு வான்மீகி கூறாத சிலவற்றை முன்னும்பின்னும் சொல்லி வைக்க வேண்டியது கம்பருக்கு அவசியமாயிற்று. ஆதலால்,

தூயமெல் லரியணைப் பொலிந்து தோன்றினான்
சேயிரு விசும்பிடைத் திரியுஞ் சாரணர்
நாயக னிவன்கொலன் றயிர்த்து நாட்டமோர்
ஆயிர மில்லையென் றைய நீங்கினர்.

என்று தயரதன் கொலு வீற்றிருந்ததைக் குறிக்கின்ற செய்யுளால் திருவிலும் தோற்றத்திலும் இந்திரன் போல் இவன் அமைந்தானானாலும் பிறன்மனையழித்த பழி அழியாது காட்டும் ஆயிரங்கண்கள் இல்லாமையே வேறுபாட்டிற் கடையாளம் என்ற நுண்மைகொண்டு இந்திரனில் வாய்மையாற் சிறந்தவன் தன் தயரதன் என்பதைக் கம்பர் பெறவைத்தார். அதுவுமின்றிப் பின் விச்வாமித்திரன் அவனுக்கு முகமன்கூறும் வாயிலாகச் சம்பரனை நினைப்பூட்டி இந்திரனில் தயரதன் வீரத்தினும் மேம்பாடுடையவன் என்பதை எய்தக்கொள்வர். இனி வாய்மையிலும் வீரத்திலும் மிக உயர்த்தும் முறையாலே தன் தயரதனின் சிறப்பினை மறவாமல் நிறுவிக்கொண்டது போன்றே கம்பர், ஒருகால் படைக்கப் பழகியதால் பிரமனுக்கு விச்வாமித்திரன் நிகராயினான் என்பதையும், மற்றப் பிரம்மனையுமே படைக்கப் புகுந்தனனெனின் ஆற்றலாலிவன் பிரம்மனினும் பெரியன் என்பதையும் ஒருங்கே விளக்குமாறு,

மடங்கல்போன் மொய்ம்பினான் முன்னர் மன்னுயிர்
அடங்கலு முலகும்வே றமைத்துத் தேவரோ
டிடங்கொளான் முகனையும் படைப்ப னீண்டெனாத்
தொடங்கிய துனியுறு முனிவன் றோன்றினான்.

என்று அவனைக் களத்தினுள் வருவிக்கும்போதே அறிமுகஞ் செய்துவைத்தனர்.

இன்னவாறு கட்டியங்கூறிக் கோசிகனைக் கொணர்தலில் உணரத்தக்கன இன்னும் ஒன்றிரண்டு உள. பின் இவன் கொள்வதற் கிருக்கின்ற கோபத்தினளவைத் 'துனியுறு முனிவன்' என்ற வாசகம் முன்னறிவித்து வைக்கின்றது. இக்கோபமும் படைப்பும் நிகழ்ந்தது திரிசங்குவின் பொருட்டு என்பதை நினைப்போமாயின், வசிட்டனுக்கும் விச்வாமித்திரனுக்கும் இடையே எந்நாளும் இகலிஉலவிய சரிதங்களை மதியுட்கொள்வோம். காமதேனுவிற்காகத் தொடங்கிய போரினின்று விச்வாமித்திரனது சரித்திரம், அரிச்சந்திரனிற்காகவும் திரிசங்குவிற்காகவும் வசிட்டனுடன் இகல் கொண்டு தொடர்ந்தே நடக்கின்ற நினைவு நம்மனத்தினிலிருந்தாலன்றிப் பின் வசிட்டன், "நீ பொறுத்தி" என்று விச்வாமித்திரனைக் கையமர்த்தியதிலுள்ள நாடகநயம் நன்கு புலப்படாது.

கவி, தான் காட்டவிருக்கும் சிறு நாடகத்திற்கு இவ்வகை நம் உணர்வை ஆயத்தம் செய்துவைப்பது அவசியமாயிற்று. ஆதலால் 'குசிக குலத்தவ ரென்றும் காதிமைந்தரென்றும்' விச்வாமித்திரனைச் சொல்லி வரவைக்கின்ற வான்மீகியைப் பின்பற்றாது கம்பர் 'நான்முகனை ஈண்டு படைப்பன் எனாத்தொடங்கிய துனியுறு முனிவனெனத்' தோந்தழைக்க லாயினர்.

இனி, முனிவனும் அரசனும் தம்முள் வினயமொழி சில பாராட்டுகின்றனர். கதையின் வாயிலாக ஒன்றைச் சொல்வோர்க்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளே பிரதானமானவை. அவைகளை நிகழ்த்தும் பாத்திரங்கள் மாநுடப் பொதுத்தன்மைக்கும் தத்தம் சிறப்புக்குணம் சரிதம் வளர்ச்சி முதலியவைகளுக்கும் இம்மி பிறழாமல் இணங்கியிருக்க வேண்டும் என்னும் நியதி கதை முறைக்கு இல்லை. கதையில் வளர்வது ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ச்சி மாத்திரமே. நாடகத்திலோ பாத்திரங்களின் பிறப்பு குணம் கல்வி ஆதிய சிறப்பினால் நிகழ்ச்சியும், நிகழ்ச்சியின் பான்மையால் பாத்திரங்களும் 'பரஸ்பரம்' வளர்ந்து வருதல் இலக்கணம். ஆதலால், வான்மீகி முனிவரின்படி விச்வாமித்திரன் தயரதனது யோகக்ஷேமம் வினவியதும் தயரதன் அவற்கு முகமன் கூறியதும் சாதாரணமாய் அங்கிலையில் இருக்கின்ற யாவராலும் இயம்புதற்கொத்த சொற்களால் அமைந்திருக்கின்றன. தெருவில் திரிகின்ற ஒருவனைப்பிடித்து மாமுடி சூட்டித் தயரத வேடமும், மற்றொருவனைப் பிடித்துச் சணல்நார்த் தாடிகட்டி விச்வாமித்திர வேடமும் புனைந்துவிட்டால் அவர் தம்முள் பேசும்வகை வடமொழி நூலினின்று வேறுபட்டிருக்காது. எந்த அரசன் முன் எந்த முனி எந்தக்காரியத்திற்கு வந்தெய்தினாலும் அந்தச் சொற்கள் அப்படியே அமையும். கதைக்கு அது போதுமாகையால் வான்மீகி அவ்விதப் பொதுவகையில் தமதுரையைத் தேர்ந்து கொண்டார்.

கம்பரின் நாடகத்திற்கு இது பற்றாது. வேந்தர் இருதிறத்தவர். நெபோலியன் ஷிவாஜிபோன்ற சிலர் மறவேந்தராவர். இவரது வாழ்வையும் ஆட்சியையும் இயக்குவது க்ஷத்திரியர்க்குரிய க்ஷாத்திரமாகும். க்ஷாத்திரம் என்பது தன் தந்தையேயாயினும் தனக்கு விஞ்சியவனாயிருக்க விடப்படாதென்னும் மனப்பான்மையும், தன்னோடு சோதரர் யாவரும் தனக்குப் பகைவரே என்னும் கொள்கையுங்கொண்டு எவ்வாற்றானும் வெல்வதே கருமமென விவகரிக்கின்ற குணம். இப்பொருளில் நம் பண்டைத் தமிழ் நூல்களூடு மறம் என்னுஞ் சொல் பயின்று வருவதால் அக்குண முடையோரை மறவேந்

தர் என்று இங்கு அழைத்தோம். (அறத்திற்கு எதிராய பாபம் என்ற பொருளில் இங்கதைக் கொள்ளவில்லை). பொருட்பாலில் திருவள்ளுவர் வகுக்கின்ற அரச இலக்கணமும் இராஜ்யதந்திரங்களும் இவ்வகை அரசர்கே உரியன. இல்லையேல் அறத்துப் பாலில் நாயனுர் ஓதியுள சில சுத்த தர்மங்கள் பொருட்பாலில் முரணக் காணலாகும். மறவேந்த ரிவ்வினத்தாராகச் சில வேந்தர் அறவேந்தராயமைவர். வாய்மையும் ஈகையும் அன்பும் பரமபத சாம்பிராஜ்யத்தின் நினைவும் இவ்வறவேந்தரின் வாழ்க்கைச் செல்வங்களாம். ஜனகன் தருமன் முதலாயினோர் அறவேந்தர் வகுப்பைச் சேர்ந்தவர். வீரத்தில் இவர் மறவேந்தருக்குக் குறைந்தவரல்ல ராயினும் அறத்திற்கே தம நினைவில் முதலிடந்தருவர். அவ்வாறே, மறவேந்தர் தீமை பூண்டொழுகுங் கயவரல்லர். அறமுஞ் சில செய்யாதார் அல்லர். அறத்தைப் பின்வைத்து வெளவிய வேற்றியின் உள்ளத்தராய் எந்நாளும் வைகுதலே அவர் குணம். துரியோதனன் மறவேந்தன். தருமன் அறவேந்தன். வியாச பாரதம் இராஜன் என்றும் இராஜரிஷிஎன்றும் அரசரை இருபிரிவாகப்பிரித்து அவ்வவர்களுக்கு வெவ்வேறு தர்மங்கள்கூறி இருக்கின்றது. அதன்படி துரியோதனன் இராஜதர்மத்திலிருந்து ஒருபடிகூட எச்செய்கையிலும் வழுவினனல்லன். இராஜரிஷி தர்மம் உயர்ந்ததாயிருக்க அதைவிட்டுச் சாதாரண இராஜ தர்மத்தைக் கையாண்டான் என்பதொன்றே குறையாதலால், பீஷ்மர் முதற் பெரியோரும் அவன் துரோபதையைத் துகிலுரியப் பார்த்திருந்தார். தருமன் முதற் பாண்டவர் அதைப் பார்த்திருந்ததற்கும் காரணம் அவர் இராஜரிஷிதர்மப்படி இகல்வெல்லுதலிலும் வாய்மையறங் காத்தலே சிறந்ததென்று இருந்ததே யாகும்.

கம்பர் இப்பொழுது நம்முன் காட்டுவது அறவேந்தன் ஒருவனை. வேந்தருக்குரிய வீரத்தோடு அன்பும் ஈகையும் வாய்மையும தலைசிறக்க வாழ்வது அறவேந்தரின் இயல்பு. இருப்பினும் ஜனகனையும் தருமனையும் போலல்லாது தயரதன் ஆதியில் "காய்ந்தே கடந்தான் பகைவேலை' ஆதலால் ஒருசிறிது மறவேந்தர் தருமத்தைப்பின்பற்றி இருத்தல் வேண்டுமென்பது தெரிகின்றது. ஆனல் அறத்தின் வித்து அவன்பால்இருந்திருக்கு மாகையால் குலத்தாலும் கல்வியாலும் வசிட்டன் உறவினுலும் மெல்லமெல்லத் தன் மனதை அவன் மாற்றிக் கொண்டிருத்தலும் வேண்டும். கம்பருடைய நூலிற்குள் அவன் விவகரிக்க வருங் காலத்தில்,

> ஆதிம் மதியும் மருளும்மற னும்மமைவும்
> எதின் மிடல்வீ ரமுமீகையு மெண்ணல்யாவும்
> நீதிந் நிலையும் மிவைநேமிய னோர்க்குநின்ற
> பாதிம் முழுதும் மிவர்க்கேபணி கேட்ப மன்னே.

என்றுரைத்தபடி அறவேந்தனுக வளர்ந்துவிட்டான். மறவேந்தருக்குப் பாதியிருக்கும் இக்குணங்கள் இவன்பால் முழுதாய் முற்றிவிட்டன. மறத்தை நீக்கித் தனியாசாட்சியில் தாழும் உள்ளத்தனுயினன். நாடகத்தில் பாத்திரங்கள் தத்தம் குணத்திற்கேற்ப வளர்ச்சிபெறும் என்று முன் கூறியதின் கருத்தும் இது. இதுவன்றி முதுமையால் வாய்தளர்ந்து தயரதன் தன் நாட்டை ஆண்டதாகக்கூறியதை முன்னேரிடத்தில்ஆராய்ந்ததும் இவ்வளர்ச்சியின்பாற் படும். குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக் கொன்றனென்றால் அது க்ஷாத்திரத்தாலன்று; இந்திரனை அளிக்கும் பொருட்டேயாம்.

இராமாயணக் கதையைக் கட்டிவைக்காமல் பாத்திரங்களினுடைய இயற்கையோடுமுரண்படாமல் நிகழ்த்த வேண்டுமானல் தயரதன் அறவேந்தனுயிருப்பது இன்றியமையாததாகின்றது. வாய்மை விலங்குமெனினும் தங் காரியம் முற்றுவதே முறையெனச் சுயோதனனைப் போல் உன்னுவர்மறவேந்தர். அன்னவகையில் சொன்ன சொல்மறுக்கப்படாதென்ற நியதி தயரதன்பால் பாதியே இருக்குமாயின் பின் கைகேசி கேட்ட வரமும் சூழ்ச்சியும் பலிப்பதில்லை; அதற்குமேல் இராமாயணமும் இல்லை. சாதாரண இராஜ தர்மத்தையே ஏற்று நடப்பவன் அவனுயின் கைகேசிக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றிலனுயினும் அது அம்முறைப்படி அதர்மமாகாது. வனவாசம் சென்று மீண்டகாள் பாண்டவர்க்கு நாடு தருவதாக அளித்த சொல்லைத் துரியோதனன் பிறழ்ந்தபோது பீஷ்மர் அதற்காக அவனை இடித்துரைக்கவில்லை விதுரரும் வாய்திறந்திலர். அவனுக்குரிய விதியின்படி அவன் குற்றவாளியல்லன்.

எனின் இராமனும இராமனேடு தன்னுயிரும் அகன்றலும் அடாவழி இறுக்கும் கைகேசிக்குஞ் சொற்பிறழாமல் சத்தியம் என்பதின் எல்லையை எட்ட வேண்டியவனு யிருக்கின்ற இத்தயரதன் மறமன்னனுயிருப்பதமையாது. ஆதலால் கம்பர் இதைக் கருத்துட்கொண்டு அறவேந்தர்க்குரிய பகைபாராட்டாதிருத்தல் வாய்மை ஈகை என்னும் மூன்று குணங்களையும் அவனுக்கு இயற்கையாயுள்ள வீரத்தோடு சேர்த்தளித்துத் தயரதனை இயக்கக் காண்கின்றேம்.

எனின், "சிற்றரசர்கள் எல்லோரும் உமக்குள் அடங்கியிருக்கிறார்களா? நீர்உமது சத்துருக்களை எல்லாம் அடக்கிவிட்டீரா?" என்று வான்மீகத்தில் கேட்பதுபோல் விச்வாமித்திரன் கம்பரில் கேட்பதற்கில்லை. அறவேந்தன் இவனென்று அவர் அறியாதிருப்பாரோ "மம சத்ரு நாசய நாசய" வென்ற ஜபம் கம்பர் கற்பித்த தயரதனின் மனதில் இராதென்பது அவர் கற்பித்த கோசிகனுக்குந் தெரியுமாதலால் இவ்விதம் இங்கு "யோக க்ஷேமம்" வினவக் காண்கிலம்.

இனி, வந்த விச்வாமித்திரனுக்குத் தயரதன் கூறுகின்றமுகமனின் தன்மையையும் பார்ப்போம். கம்பரிலே இது ஒரு செய்யுளுள் அடங்கியிருக்க வால்மீகி முனிவர் அதற்குப் பல சுலோகங்கள் வழங்கியிருக்கின்றார். அதனை, 'எல்லாரும் ஆச்சரியப்படும்படியாயும் அநேக பிரகாரமாயும் சொன்னுன்' என்று வால்மீகி முனிவரே அழைத்தபோதிலும் ஒன்றையே திருப்பித் திருப்பி 'அநேக பிரகாரமாய்'ச் சொன்னஉண்மை தெரிகின்றதேயன்றி எவ்விதத்தில் அது 'ஆச்சரியப்படும்படியாய்' இருக்கிறதென்பது எளிதில் விளங்கவில்லை. வார்த்தையைக் கொட்டி மெழுகுகின்றான். உற்றதோர் பெரிய துன்பம் முனிவனின் வரவால் தீர்ந்ததாகப் பொருத்தமற்றுச் சில பேசுகின்றான். கேட்குமுன் தருவதாக வாக்களிக்கின்றான். அளித்த வாக்கை நிறைவேற்றுவது திண்ணமெனச் சங்கையற—பின்மறுக்கப் போகின்றானுதலால் — வற்புறுத்துகின்றான். இதற்கெதிராகக் கம்ப தயரதன்,

> "நிலஞ்செய்தவ மென்றுணரி
> னன்றுசெடி யோயென்
> நலஞ் செய்வினை யுண்டெனினு
> மன்றுநகர் நீயான்
> வலஞ் செய்துவ ணங்கவெளி
> வந்தவிது முந்தென்
> குலஞ் செய்தவம்"

என்று இனிது கூறுவதற் கொத்தன யாவும் குறைவின்றித் தன்னிலை கலையாது கூறலுற்றனன்.

சொல்வோர்க்கிடையே சொல்கின்ற காலத்திற்கு ஏற்றதாய், ஒரு பொருள் தரும் வாசகம் பின் நிகழ்வதையொட்டி ஆராயின் படிப்போர்க்கு அந்நிகழ்ச்சிக்கேற்ற மறுபொருள் தன்னுள் அச்சொல்வோர் அறியாமலே அடங்கி யிருக்கு மாயின் ஆங்கிலத்தில் அதனை Dramatic Irony என்னும் அணி என்பர். "என் நாடுசெய்த தவத்தாலும் நான் செய்ததவத்தாலும் நீ இங்கு வரவில்லை. என் குலத்தவப்பயனுல் வந்தனை," என்று தயரதன் கூறியபோது தன்னெருவன் தவம் இம்முனிவன் வருதற்குப் பற்றாதாகையால் தம் முன்னேர் யாவரும் செய்த தவமெலாம் ஒருங்கே திரண்டு இவனை அங்குக் கொணர்ந்தது என்னும் கருத்துடையவன். ஆனல் 'குலக்கொழுந்து,' குலத்தவம் 'தவப்பயன்,' என்னும்இத்தொடர்கள்புத்திரனைக்குறிக்கும் வழக்கத்தன. எனின், "என்னையும் என் நாட்டையும் கருதி நீ வந்தவனல்லன். எங்கள் குலம் செய்த தவத்தின் முதிர்பயனுகிய இராமன் இங்கு இருப்பதால் அவன் பொருட்டு வந்துளாய்" என்பதுபோல் வருவதறிந்த வாசகர்க்கு இவ்வுரை தொனிக்கும்.

T. N. சேஷாசலம்.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11. VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

சுகாமிர்தம்.

வக்கீல்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள், கிளார்க்குமார் போன்ற மூளைவேலை செய்கின்றவர்களும் பிற நோய்களால் வருத்தப்படுபவர்களும் ரஸாயன ஔஷதங்களைச் சாப்பிடத்தேவையில்லை. மிகவும் இன்றியமையாத ஔஷதம் இது. பல மூலிகைகளைக்கொண்டும், அயர், காந்தம் இவைகளைக்கொண்டும் செய்யப்பட்டுள்ளது.

1-புட்டி 48-வேளை மருந்து ரூபா 3 0 0

கீழ்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

Bhishakwara,

A. KANAKARATNAM A. M. A. C.

Late Hony. Medical Officer & Anatomy Assistant,

Govt. School of Indian Medicine.

Ayurvedalayam,

1/24 Arunachala Naick St., Chintadripet, Madras.

ஆநந்த குணபோதினி

மூன்றும் வருடம்

இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவந்ததில்லை. இது சிறந்த வழியில் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை. 5000 சந்தாதாரர்கள்.

வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-4.

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ்,

302, தங்கசாலை வீதி, சென்னை.

9-ம் பதிப்பு! 9-ம் பதிப்பு!!

வெளி வந்துவிட்டது

ஆங்கில ஆசான்

தமிழ் நாட்டில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினுயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், முதன் முதல் வெளிவந்ததும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் இதுவே. எமது இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட் மார்க் இருக்கிறதாவென்று கவனித்துப் புத்தகம் வாங்குங்கள்.

800-பக்கம்

முழு காலிகோ பயிண்டு

விலை ரூ. 2-0-0.

தபால் சார்ஜ் பிரத்யேகம்

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலைத் தெரு, சென்னை.

கம்பராமாயணம் பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறுது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத் திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலா நிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally under-tood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

ஆப்கானிஸ்தான் அரசர்:—ஐரோப்பிய பிரயாணம் முடிந்து ஆப்கானிஸ்தனுக்குத் திரும்பிவந்து விட்டார்.

* * *

ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாச ஐயங்காரை:—ருஷ்யாவுக்கு வரும்படி சோவியெட் கவர்ன்மென்டார் கேட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

* * *

காங்கிரஸ் தலைவர்:—இந்தவருஷ கல்கத்தா காங்கிரசில் வங்காள காங்கிரஸ் கம்மிட்டி மோதிலால் நேருவைத் தலைவராக தெரிய வேண்டுமென்று வெளிப்படுத்தியிருக்கிறது.

* * *

எரிமலையினுல் சேதம்:-பிலிப்பைன் தீவில் லிபொக் என்னும் இடம் எரிமலையினுல் அழிக்கப்பட்டது. அவ்வூரில் இருந்த 7,000 ஜனங்கள் ஊரைவிட்டு ஓடிவிட்டார்கள். பக்கத்திலிருந்த அனேக கிராமங்களும், அழிந்துபோய் விட்டன.

* * *

பெண்களுக்கு சம வோட் உரிமை:—இங்கிலாந்தில் சமவோட் உரிமைச்சட்டம் பார்லிமென்டில் நிறைவேறி அரசர் சம்மதமும் பெற்றுவிட்டது. பெண்களுக்கும் ஆண்களுக்கும் வோட்கொடுக்கும் உரிமையில் வித்தியாசம் இல்லை.

* * *

சர். J. C. போஸ்:—வீயன்ன சர்வகலாசாலையார் சர் போஸ் அவ்விடத்தில் செய்த பிரசங்கங்களை வியந்து, அவரால் சாஸ்திர விர்த்திக்கு ஏற்பட்டிருக்கும் உதவி அளவற்றதென்று வைசராய்க்கு ஒரு தந்தி கொடுத்திருக்கிறார்கள்.

* * *

வேல்ஸ் இளவரசரின் தென் ஆப்பிரிக்கா பிரயாணம்:— வேல்ஸ் இளவரசர் செப்டம்பர் மாதம் 7-ம் தேதி இங்கிலாந்தை விட்டுத் தென் ஆப்பிரிக்காவுக்குப் பிரயாணமாவார். 28-ம்தேதி மொம்பாசாவிற்குப் போய்ச் சேருவார்.

* * *

கரக்பூரில் குழப்பம்:—கரக்பூரில் ஹிந்துமுஸ்லிம் சீக் சாதியார்களுக் கிடையில் சென்ற வெள்ளிக்கிழமையன்று ஒருபெரிய குழப்பம் உண்டாகி 16 பேர் கொல்லப்பட்டார்கள். இருபத்தைந்து பேர்வரையில் காயமடைந்தார்கள்.

* * *

ரயில்பாதையில் பெரிய விபத்து:— இங்கிலாந்தில் டானிங்டன் என்னுமிடத்தில் ஒரு என்ஜினும் ஒரு ஜனவண்டியும் ஒன்றோடொன்று மோதி 24 பேர் இறந்து போனார்கள். அனேகருக்குக் காயம் பட்டிருக்கிறது. இதைப்போன்ற விபத்து இதற்குமுன் இருபது வருஷ காலத்துக்குள் இங்கிலாந்தில் நடந்ததில்லையாம்.

* * *

ஜப்பானில் வெள்ளப் பிரவாகம்:—சென்ற வாரத்தில் மேற்கு சப்பானில் வெள்ளப் பிரவாகத்தினுல் நூறுபேருக்கு உயிர்ச்சேத முண்டானதுடன் 1500 வீடுகளும் 70000 ஏகரா நிலமும் வெள்ளத்தினுல் மூடப்பட்டன. பத்து லக்ஷம் பவுன் மதிக்கப்பட்ட சொத்துக்கள் அழிந்துபோயின.

* * *

அகில இந்திய சுதேச அரசர்களால்:—ஆளப்படும் பிரசைகளின் பிரதிநிதிகள் ஒருகூட்டம் கூடி இங்கிலாந்துக்குப் பிரதிநிதிகளை அனுப்பித் தங்கள் விருப்பத்தைக் கேளாமல் தங்கள் அரசர்கள் பிரித்தானிய ராசாங்கத்தாரோடு செய்ய விருக்கும் உடன்படிக்கைக்கு மாறாகத் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட விருக்கிறார்கள்.

பெரிய மலைப்பாம்புகள்:—இலங்கையிலே குருநாகல் என்னுமிடத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு தோட்டத்தில் இரு பெரிய மலைப்பாம்புகள் பிடிக்கப்பட்டன. அவைகளில் ஒன்று 26 அடி நீளமும் மற்றது 13 அடி நீளமுமாம். ஒன்று பெண்பாம்பு அது300 முட்டைகளைக் கொண்டிருந்ததாம். இரண்டும் கொழும்பு காட்செசாலையில் இப்போது இருக்கின்றன.

* * *

சென்னையில் பார்த்தசாரதி கோவிலில்:—வாகனம் தூக்குகின்ற 50 வேலையாட்கள், தாங்கள் சுவாமியை மாத்திரம் தூக்குவார்களே யல்லாமல், வாகனத்தில் அர்ச்சகர் ஒருவரையும் கொண்டு செல்லமாட்டார்கள் என்றும் அர்ச்சகர்களுக்கு வரும் வருமானத்தில் சரிபாகம் தங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் பிரச்னை ஏற்படுத்தி இது தீர்கிறவரையில் வேலை செய்வதை நிறுத்தி விட்டார்கள்.

* * *

பம்பாய் மில்கள்:—தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. மில்களில் தண்டு வேலை செய்பவர்களும் யந்திரங்களில் வேலை செய்பவர்களும் வேலையை நிறுத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்து கொண்டிருக்கிறார்கள். சொந்தக்காரர் சங்கம் வேலையாட்களுக்குக் கொடுக்கத்தக்க சம்பள வீதத்தைப்பற்றி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றது. இது தொழிலாளர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

* * *

தென்னிந்திய ரயில் பாதையில் வேலைநிறுத்தம்:—திருச்சினுப்பள்ளிபோத்தனுர்தொழிற்சாலைகளில் உள்ள வேலையாட்கள் வேலைசெய்யாமல்இருக்கிறார்கள். இதன் காரணமாக போலீஸ் பந்தோபஸ்தும் போலீஸ் சட்டத்தின் 30- செக்ஷன்படி வேலையாட்கள் ஊர்வலம் வரப்படாதென்னும் விதியும் அங்கே ஏற்பட்டிருக்கிறது. இருக்கிற நிலைமையைப் பார்த்தால் ரெயில் பாதை முழுதிலுமுள்ள தொழிலாளர்கள் வேலையை நிறுத்துவார்கள் போலிருக்கின்றது.

* * *

முத்துத் திருட்டு:—பம்பாயில் சிலதினங்களுக்குமுன் ரத்னலால் என்னும் ஒரு குஜராத்தியின் சட்டைப்பையிலிருந்து, 15,000 ரூபாய் விலையுள்ள மூன்று முத்துக்கள் காணமற் போய்விட்டன. அவர் உடனே போலீஸாரிடம் அறிவித்தார். இப்போது இம்முத்துக்களை போலீசார் இரண்டு வியாபாரிகளிடம் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு மார்வாரியால் விற்கப்பட்டதென்று வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த மார்வாரியையும் ஞானுஜான் என்னும் ஒரு தாசியையும் இது விஷயமாய் கைதி செய்திருக்கிறார்கள்.

189010

* * *

ஸைமன் கமிஷன்:—தன்னோடு சேர்த்துக்கொண்டு விசாரணை நடத்தும் கமிட்டிக்கும், சாக்ஷிகளை விசாரிப்பதிலும் வாக்குமூல மெடுப்பதிலும் தஸ்தவேஜிகளைப் பரிக்ஷிப்பதிலும் எல்லாச் சுதந்தரங்களையும் கொடுக்கச் சித்தமாயிருந்தபோதிலும், டாக்டர் அன்சாரி, ஸ்ரீமான். சீனிவாச ஐயங்கார், மவுலானு அப்துல் கலாம் அஜட், மவுலானு மகமத் ஆலி (காங்கிரஸ் கட்சியார்); லாலா லஜபட் ராய், பண்டிட் மதன்மோகன் மாலவய்யா, ஸ்ரீமான் ஜயகர், N. C. கெல்கார், (நாஷனலிஸ்ட் கட்சியார்); மிஸ்டர். ஜின்னு, ஸர். பி. தகூர்தாஸ், மவுல்வி மகமட் யாகப், ராஜா கஸநபர் ஆலிகான்(இண்டிபெண்டண்ட் கட்சியார்); முதலாயினோர் பின்னும் ஸைமன் கமிஷனோடு தாம் சேருவதற்கில்லையென்றே தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஸைமன் கமிஷன் எந்த இடத்திலிருந்து தன் அதிகாரத்தைப் பெற்றதோ அதே இடத்திலிருந்து இந்தக் கமிட்டியும் பெறுதவரையில் தாங்கள் திருப்தி அடைவதற் கில்லையென்று பலர் தெரிவித்து வருகிறார்கள்.

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of cur society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"

11, Vellala Street, Purasawalkum, Madras.

Dr. Orison Swett Marden's World-Famous Inspirational Books

(3)

TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for ; To succeed in your chosen calling ; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers — Diverted by salary — Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence — Health-building during sleep — Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease — Killing emotions — Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influeuce—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master — Trifles — Courage — Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement — The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)